மே - 2014

திருவள்ளுவர் ஆண்டு 2044

செந்தமிழ்

தொகுதி : 58
பகுதி : 7

விலை ரூ. 10/-

திங்கள் இதழ்

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், செந்தமிழ்க் கல்லூரியின் முப்பெரும் விழாவில் சிறப்பு விருந்தினராக மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணைஇயக்குநர் முனைவர்.சீ.சீதாலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பரிசளித்தார்கள். உடன் செந்தமிழ்க் கல்லூரிச் செயலர் திருமிகு. கோச்சடை இரா. குருசாமி அவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் செயலர் திருமிகு. இரா. அழகுமலை அவர்கள், செந்தமிழ்க் கல்லூரித் தலைவர் திரு. சு. வீரணசாமி அவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் துணைத்தலைவர் திரு. முத்தையா பசும்பொன் அவர்கள் மற்றும் முதல்வர் முனைவர் மு.மீனா அவர்கள்.

செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 58

பகுதி : 7

மே : 2014

திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2044

வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

21.03.1867 - 02.12.1911

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 100	ரூ. 600
ஆயுள் கட்டணம்	ரூ. 1000	ரூ. 6,000
புரவலர் கட்டணம்	ரூ. 5000	ரூ. 10,000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 10	

ஆசிரியர்

இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

பொருளடக்கம்

பண்டைத் தமிழர்களின் அரண்கள்	க. தினேஷ்	4
பெருமழைப் புலவரின் மேற்கோள் திறன்	மோ. அருள்செல்வன்	21
பெயர்ப்பலகையில் தமிழ்	முனைவர். மலையமான்	26
ஏ.ஏ.ஹெச்.கே.கோரியின் படைப்புகளில் சமுதாயம்	இ. பூங்கொடி	27
அகநானூற்றில் கொன்றை மலர்	க. வளர்மதி	32
கருத்தாடல் விளக்கமும் கருத்துப் பரிமாற்றமும்	மு. ஜான்சி	37

இதழ் மணம்

அன்புடையீர்!

வணக்கம். சித்திரைப் பெருவிழா அயர்ந்த மாமதுரையின் பொலிவு போன்று இம்மாதச் செந்தமிழ் இதழ் சிறப்புடன் அமைந்துள்ளது.

பண்டைத்தமிழர் வியத்தகு அறிவும், ஆற்றலும் உடையவர்களாகத் திகழ்ந்துள்ளனர். அதற்குச் சான்றாக அமைவது அரசர்கள் அமைத்த அரண்கள் என்பதைச் சங்க இலக்கியங்கள் முதலான இலக்கிய, இலக்கணச் சான்றுகளோடு மட்டுமல்லாமல், வரைபடம் வாயிலாகவும் நுட்பமாக ஆராய்ந்து, "பண்டைத் தமிழர்களின் அரண்கள்" என்ற தலைப்பில் பேராசிரியர் க. தினேஷ் அவர்கள் வழங்கியுள்ள கட்டுரை மிகப் பாராட்டுதலுக்குரியது. வாழ்த்துக்கள்.

ஆய்வுகளுக்கு அடித்தளமாக விளங்குவது ஆய்வாளர்கள் பயன்படுத்தும் மேற்கோள்கள். மேற்கோள்களைப் பயன்படுத்தும் திறனே, ஆய்வுப்பொருளை வலுப்படுத்தும். அதன் நுட்பங்களை எளிய நடையில் சிறப்பாக திரு. மோ. அருள்செல்வன் வெளிப்படுத்தியுள்ளார்.

இக்கால இலக்கியங்கள் சமுதாய நிலையை யதார்த்தமாக வெளிப்படுத்தியுள்ள தன்மையை ஆய்வாளர் இ. பூங்கொடி தன் கட்டுரையில் பதிவு செய்துள்ளார்.

அக இலக்கியங்களில் சிறப்பாகப் பேசப்படுகின்ற கொன்றை மலரின் சிறப்பையும் தன்மையையும் அறிவியல் செய்திகளோடு கட்டுரையாளர் க. வளர்மதி சிறப்பாகக் புலப்படுத்தியுள்ளார்

மொழியின் பயனாக விளங்கும் கருத்துப் பரிமாற்றத்தையும் கருத்தாடல் விளக்கத்தையும் வகை தொகையோடு ஆய்வாளர் மு. ஜானகி எளிய நடையில் மொழியியல் சார்ந்து சிறப்பாக வெளியிட்டுள்ளார்.

தமிழ் இலக்கியத்தினைத் பல்வகைக் கோணங்களில் ஆய்ந்து வெளியிட்ட கட்டுரைகளைத் தாங்கி இம்மாத இதழ் வெளிவந்துள்ளது.

- ஆசிரியர் -

பண்டைத் தமிழர்களின் அரண்கள்

க. தினேஷ்
அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகம்

போர் என்பது அன்று முதல் இன்று வரை நாடு விரிவாக்க அரசியல் நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது. ஒரு நாட்டின் வளங்கள் வென்ற நாட்டால் கொள்ளையடிக்கப்படுதலே போரின் உட்பொருளாகும். அன்றைய "வெட்சி" முதல் இன்றைய "விண்தடை" வரை இதுவே நியதி. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளிடையே வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ பகைமையைத் தோற்றுவிக்கும் அமைதி கெட்ட நிலையும் அதன் விளைவான மனித வளப்பேரழிவுகளுமே போர் என்பதாகும். இத்தகைய போர்க்காலங்களில் தன் நாட்டினையும் தன் மக்களையும் பகைவரிடம் இருந்து காப்பது ஒரு நாட்டு மன்னனின் / தலைவனின் கடமையாகும்.

'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்பது பண்டைத் தமிழரின் அரசியற் கொள்கையாகும். நாட்டின் மைய இயக்கமாகக் கருதப்பட்ட அரசன் வாழும் இடம் அரண் பல உடையதாக இருந்தது. 'கோயில்', 'அண்ணல் கோயில்', 'கடிநகர்' என்றெல்லாம் அழைக்கப்பட்ட அரண்மனையின் பாதுகாப்பில் கோட்டை முக்கியப் பங்காற்றியது. கோட்டை அரண்மனைக்கு மட்டுமின்றி அது அமைந்திருந்த தலைநகருக்கும் தலையாய பாதுகாப்பாக அமைந்தது. நாட்டைப் பாதுகாக்க ஏற்படுத்தும் கோட்டையும் அதனுள் அமைந்திருந்த முற்றுகைத் தடுப்பு முறைகளும் அரண் என்பதனுள் அடங்கும்.

வலிமையான அரண்கள் ஓர் அரசனின் பகைத்தடுப்பு முறைகளைக் காட்டுவதோடு அவ்வக்காலத்தில் அரசின் எழுச்சியுடன் தோன்றிய போர் நுட்ப அறிவையும், படைக்கல வலிமையையும், நகரின் கட்டட வளர்ச்சியோடு உடன் வளர்ந்த அக்கால மக்களின் தொழில்நுட்ப அறிவையும் காட்டுவன ஆகும். அரண் என்பது பாதுகாப்பு (Defence) மட்டுமல்ல; அன்றைய அரசின் தாக்குதல் வலிமைக்கான (Ofence) கொள்கலனுமாகும்.

தொல்காப்பியத்தில் மதில் பற்றிய சில குறிப்புகள் (புறம். 10) காணப்பெறினும் இதுவரை கிட்டியுள்ள நூல்களில் அரண்பற்றிய செய்திகளை இலக்கணப்படுத்துவது போல அமைந்திருப்பது திருக்குறளே ஆகும்.

இலக்கியங்கள் கூறும் அரண்கள்

தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் அரண்களைப் பற்றிய செய்தியைக் குறிப்பிடுகின்றது.

''முழுமுத லரணம் முற்றலும் கோடலும்
அனைநெறி மரபிற் றாகும் என்ப'' (தொல். புறத். 10)

இவற்றில் முழுமுதல் அரணாவது மலையும், காடும், நீரும் அல்லாத அகநாட்டுச் செய்த அருமதில், வஞ்சனை பலவும் வாய்த்துத் தோட்டி முள் முதலியன பதித்த காவற்காடு, அதனை அடுத்த கிடங்கு / அகழி, யவனர் இயற்றிய பலபொறிகளும் வாயிற்கோபுரமும்,பிற எந்திரங்களும் பொருந்த இயற்றப்பட்டதாக இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் கூறுகின்றனர். மேலும் பதிற்றுப்பத்தும் இவ்வகை அரண்களைப் பற்றிய குறிப்புகளைத் தருகின்றது.

செம்பொறிச் சிலம்பொடு அணித்தழை தூங்கும்
எந்திரத் தகைப்பின் அம்புடை வாயில்
கோள்வல் முதலைய குண்டுகண் அகழி
வானுற ஓங்கிய வனைந்து செய்புதிசை
ஒன்னாத் தெவ்வர் முனைகெட விலங்கி
நின்னிற் றந்த மன்னெயில்.. (பதிற். 53)

செம்பொறிச் சிலம்பு, எந்திரத் தகைப்பு, குண்டுகண் அகழி முதலான சொற்களோடு 'வானுற ஓங்கிய வனைந்துசெய் புரிசை' என்ற தொடரும் ஆழ்ந்து ஆராயத்தக்கதாகும். 'புரிசை' என்ற சொல் கோட்டையை உடைய பெருநகரையே குறிக்கும். (இன்றும் வடநாட்டில் 'புரி-பூர்' என்னும் பின்னொட்டுகளுடன் விளங்கும் அத்தனைப் பெருநகரங்களும் கோட்டை, கொத்தளங்களை உடையனவாகவே உள்ளன. 'புரி' என்ற சொல்லின் மருவிய வழக்கே 'பூர்' எனக் கொள்ளலாம்).

திருக்குறள் கூறும் அரண்கள்

திருவள்ளுவர் அரணின் அமைப்பு, சிறப்பு ஆகியவற்றைப் பற்றி விளக்கியுள்ளார். போர்மேற் செல்வோருக்கும், போருக்கு அஞ்சி தற்காத்துக் கொள்ள விரும்புவோர்க்கும் (குறள் : 741) அரண் சிறந்ததாகும்.

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடு உடைய தரண்''

என்ற குறட்பாவில் (742) மணிபோல் தெளிந்த நீரும், வெட்ட வெளியான பரந்த நிலமும், உயர்ந்த மலையும், அழகிய நிழல் உடைய காடும் ஆகிய இவை நான்கும் உடையதே ஒரு நாட்டின் சிறந்த அரண் எனக் குறிப்பிடுகின்றார். மேலும் பகைவர் முற்றுகையிட்டாலும் அவர்களால் கைப்பற்ற முடியாததாகவும், உள்ளிருப்போருக்கு உணவுடையதாகவும்,

எதிரிகளுடன் போர் புரிவதற்கு எளிதானதாகவும் அமைக்கப்பட்டதே சிறந்த அரண் என்பதை,

கொளற்கரிதாய் கொண்ட கூழ்த் தாகி அகத்தார்
நிலைக் கெளிதாம் நீர தரண்

என்னும் குறட்பா (745) மூலம் அறிய முடிகிறது.

திருக்குறளில் கூறப்படும் அரண் பற்றிய செய்திகள் பொதுத் தன்மையன. எந்தவொரு குறிப்பிட்ட அரண் பற்றியோ அதன் அமைப்பு மற்றும் உட்கூறுகளைப் பற்றியோ திருக்குறள் விரிவாக விளக்கவில்லை. இவை குறளின் நோக்கமும் இல்லை. பகைவர் தம் முற்றுகையின் போது அரண் என்பது எவ்வாறு ஒரு நாட்டின் பாதுகாப்பு இயந்திரமாய் (defence mechanism) அமைய வேண்டும் என்பதை விளக்குவதே வள்ளுவரின் நோக்கமாகும். அரசனின் போர்த்திறனின் போர்வினை மாட்சிமையின் ஒரு பகுதியாய் அரண் அமைய வேண்டும் என்பதே (குறள் 750) விளக்கமாகும்.

அரண்களின் அமைப்பும் வகையும்

இறை ஆட்சி மாட்சிமை பெற அரண் இன்றியமையாதது ஆகும். இவ்வகை அரண்கள் முற்றுகையினாலோ, போரினாலோ, சூழ்ச்சியினாலோ, பகைவர்களால் கைப்பற்ற முடியாத சிறப்புடையதாக இருக்க வேண்டும். இவ்வகை அரண்கள், பண்டைத் தமிழகத்தில் சிறந்து காணப்பட்டன. அவற்றை முறையே **இயற்கை அரண்கள், இயற்கை - செயற்கை அரண்கள், செயற்கை அரண்கள்** என மூவகைப் படுத்தலாம்.

இயற்கை அரண்கள்

இயற்கை அரண்கள் என்பன ஒரு நாட்டினைச் சுற்றியோ அல்லது ஒரு கோட்டையினைச் சுற்றியோ காணப்படும் இயற்கை வளங்களைத் தம் நாட்டின் பாதுகாப்பு அரண்களாக அமைத்துக் கொள்ளும் முறையாகும்.

ஒரு நாட்டின் அரண்களாக மலைகள், காடுகள், ஆறுகள், நிலங்கள் முதலானவை பயன்படுத்தப்பட்டதைத் தமிழ இலக்கியங்கள் மூலம் அறிய முடியும். இவ்வகை அரண்கள் வலிமைபெற அந்நாட்டிற்குப் புவியியல் தன்மையும் மிகவும் பொருத்தமாக அமைவது இன்றியமையாததாகும். இத்தன்மையைப் பொருத்தே அந்நாட்டின் அரண்கள் சிறப்பாக அமையும்.

மலை, காடு, கோட்டைக்கு உள்ளே இருந்த விளை நிலம், கடல், ஆறு முதலானவை முக்கியமான இயற்கை அரண்களாகும். இவற்றுள்ளும் மலையரணும் காட்டரணும் பண்டைத் தமிழ் இலக்கியங்களுள் பரக்கப் பேசப் பெற்றுள்ளன.

மலை அரண்கள்

சங்க காலச் சீறூர் மன்னர்கள் நீண்ட மலைத் தொடர்களையும், மலைகளையும் சிறந்த இயற்கை அரண்களாகக் கொண்டனர். மலைகளில் கோட்டைகட்டி இவர்கள் ஆட்சி புரிந்தனர். இவற்றில் பாண்டிய நாட்டின் பறம்புமலையும் கொங்கு நாட்டின் கொல்லிமலையும் முற்காலத்தில் சிறந்து விளங்கின. இவ்வகை மலைகள் வளங்கள் நிறைந்து காணப்படுவதால் பகைவர் முற்றுகையின் போது இந்நாட்டிற்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படுவதில்லை.

பாரியின் பறம்பு மலையினை மூவேந்தரும் முற்றுகையிட்டபோது பாரி நாட்டிற்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படவில்லை. ஏனெனில் கழைநெல்லும், பலாக்கனியும், கிழங்கும், தேனும் குறைவற்றுத் தந்த பறம்புமலை பகைவரின் நெடுநாள் முற்றுகையைத் தாங்கி நின்றது. 'எல்லாப் பொருளும் உடையதாய்' (குறள்.746) இம்மலை பகைவரின் ஊக்கத்தையும் செருக்கையும் அழிப்பதாய் அமைந்திருந்தது. இதனைக் கபிலர்,

"அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொண் முரசின் மூவிரு முற்றினும்
உழுவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே
இரண்டே தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
தினிநெடுங் குன்றந் தேன் சொரியும்மே
வான்க ணற்றவன் கனையே யாங்கு..." (புறம். 109)

எனச் சிறப்பித்துக் கூறுகிறார். மேலும் இம்மலை முந்நூறு ஊர்களை உள்ளடக்கிய வளமான குளிர்ந்த நாடு என்பதை,

"முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு"

என்னும் புறநானூற்று (110) அடி விளக்குகிறது.

மிளை அல்லது காவற்காடு

மிளை என்பது நாட்டின் புறத்தே இயற்கையாக அமைந்திருக்கும் அடர்ந்த காடுகளைக் கொண்ட ஒருவகை அரண் ஆகும். இவ்வரண்கள் பகைவர்கள் எளிதில் கடந்து வரமுடியாதபடித் தடுப்பு வசதிகளுடனும், அவர்களைத் திடீரெனத் தாக்கும் பொறி அமைப்புகளுடனும் அமைக்கப்பட்டிருக்கும். காக்கும் காட்டிற்கு 'மிளை' என்பது பெயராகும். இதனை இலக்கியங்கள் 'கடிமிளை' (புறம். 21), 'அருமிளை' (பதிற். 9-ம் பத்து), 'அருங்குழு மிளை' (மதுரை. 64), 'வருமிளை' (சிந். 1142) என்பன

போன்ற பெயர்களில் குறிப்பிட்டுள்ளன. இவ்வகைக் காடுகளில் மிக உயரமான அடர்ந்த மரங்களும் முட்புதர்களும், சூரியக்கதிர்கள் உள்ளே நுழைய முடியாதபடி பகலிலேயே அச்சத்தைத் தரக்கூடிய அடர்ந்த இருளும் சூழ்ந்து காணப்படும்.

"கதிர் நுழை கல்லா மரம்பயில் கடியிளை" (புறம். 21)
"வாழ்முள் வேலிச் சூழ் மிளைப் படைப்பை" (பெரும். 126)

என்பன சங்க இலக்கியப் பதிவுகளாகும். மேலும், இக்காவற்காட்டினுள் நுழைய ஆங்காங்கே சிறிய வாயில்கள் காணப்படும். இதற்குப் 'புழை' என்று பெயர். போர் தொடங்கும் முன் இவ்வாயில்கள் கலை முள்ளினாலும், எந்திரப் புழையினாலும் அடைக்கப்படும். இதனை,

"செலவசைஇய மறுக்குளம்பினின்
இனநன்மாச் செலக்கண்டவர்
கவைமுள்ளிற் புழையடைப்பவும்" (புறம். 98)
"திங்களும் நுழையா வெந்திரப் படுபுழை" (புறம். 177)

என்னும் புறப்பாடல் அடிகள் மூலம் அறியலாம்.

உம்பர்க் காட்டின் கொடுமை

கடலாலும், மலையாலும் சூழப்பெற்ற நாட்டில் உம்பர்க்காடு ஒரு சிறுபகுதி ஆகும். இதனை வேழக்காடு என்றும் வழங்குவர். இப்பகுதியில் களிறுகள் மிகுதியாகக் காணப்படும். கருவுற்ற தன் பெண்புலிக்கு அதன் இணைப்புலி உணவினைக் கொடுக்க விரும்பி நீண்ட பெரும் கோடுகளையுடைய யானை ஒன்றைக் கொன்று வீழ்த்தியது. அடியுண்ட களிற்றை அதன் செங்குருதி பரந்த பாறைகளிலெல்லாம் படியுமாறு ஈர்த்துச் சென்றது. தன் அன்புடைத் துணைக்கு அதை மகிழ்ச்சியுடன் அளித்து வெற்றிச் செருக்கால் புல்தரையில் வீழ்ந்து புரண்டது. இத்தகைய கொடுமையுடையது அந்த வேழக்காடு. இதனை அறிந்த யானைகள் அந்தக் கானுறை வாழ்வை வெறுத்து வழியில் கிடக்கும் பலாக்கனிகளைத் தின்றுகொண்டே வெளியேறும் என உம்பர்க்காட்டின் கொடுமைகளாகத் தாயங்கண்ணனார் தாம் பாடியுள்ள அகநானூற்றுப் பாடல் ஒன்றில் சித்தரித்துக் காட்டுகிறார். அதனை,

"கொடுமுழ வீங்கை சூரலொடு மிடைந்த
வான்முகை யிறும்பின் வயவொடு வதிந்த
உண்ணுப் பிணவி னுயக்கந் தீரிய
தடமருப் பியானை வலம்படத் தொலைச்சி
வியலறை சிவப்ப வாங்கி முணங்கு நிமிர்ந்து
புலவுப்புலி புரண்ட புல்சாய் சிறுநெறி

பயிலிருங் கானத்து வழங்கல் செல்லாது
பெருங்களிற் றினநிரை கைதொடூஉப் பெயருந்
தீஞ்சுளைப் பலவின் தொழுதி யும்பற்
பெருங்காடு....'' (அகம். 357)

என்ற பாடல் மூலம் அறியலாம். எனவே நெடுங்கோடுடைய களிற்றையே கொன்று தீர்க்கும் - புலிகளும், யானைகளும் நிறைந்த இத்தகு காட்டினைப் பகைவர்கள் கடந்து வருவது எளிதன்று என்பது பெறப்படும் செய்தியாகும்.

கடப்பதற்கு அரிய இவ்வும்பர்க்காட்டையும் பல்யானைச் செல்கெழு-குட்டுவன் வென்றான் என்ற செய்தி பதிற்றுப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

“இமைய வரம்பன் நம்பி யமைவர
உம்பற் காட்டைத் தன்கோ னிறீகு'' (பதிற்: 3. பதிகம்)

இவ்வும்பர்க்காடு ஐந்நூறு சிற்றூர்களைக் கொண்டதொரு சிறுநாடு[1] ஆகும். எனவே இவ்வகைக் காவல் அரண்களைக் கொண்ட காட்டினைப் பகைவர்கள் கடந்து வருவது எளிதன்று.

நிலவரண்கள்

நிலவரண் பற்றிய செய்திகள் மிகுதியாகக் கிடைக்கப் பெறவில்லை. பகைவர், புறமதிலைப் பற்றாமை பொருட்டு அதன் புறத்தேயுள்ள நிலமும், பகைவர் முற்றுகை நீடித்திருக்கும் போது அகத்தார்க்கு வேண்டும் உணவுப் பொருட்களைப் பயிர்செய்யும் வகையில் மதிலின் உட்புறமாக விடப்படும் “தண்ணடை நிலமும்” நிலவரண்கள் ஆகும் ஒளவை. துரைச்சாமிப்பிள்ளை “தண்ணடை” மன்னன் என்றால் மருதநில ஊர்களையுடைய பெருவேந்தர் எனக் குறிப்பிடுகின்றார். “தண்ணடை” என்ற சொல்லுக்குச் “சிற்றூர்” அல்லது “மருதநிலத்தூர்” எனப்பொருள் தருகிறது தமிழ்ப்பேரகராதி.

மதிலின் உட்புறமாக விடப்பெறும் நன்செய் நிலங்களைத் “தண்ணடை நிலம்” எனக் குறிப்பிடலாமா என்பது தொடர் ஆய்வுக்கு உரியது. இதற்கான சங்கச் சான்றுகள் திரட்டப்பட வேண்டும். நிலவரணில் மதிலின் உள் - வெளி நிலங்கள் அடக்கப்படலாம் என்பது தற்போதைய ஆய்வில் வினா நிலையிலேயே வைக்கப்படுகிறது.

நீர் அரண்கள்

நீரும் ஒரு நாட்டிற்குச் சிறந்த அரணாகும். ஆழமான ஆறும் கடலும் சில கோட்டைகளின் அரண்களாகக் காணப்பட்டன. இவ்வகையில் இயற்கையாகவே நீர் சூழ்ந்த அரண் தமிழகத்தில் குறைவாகவே காணப்பட்டது. முப்புறமும் கடல் சூழ்ந்த தமிழகம் சிறந்த நீரரண்களைக் கொண்டு விளங்கியது எனக் கூறிக் கொள்ளலாம்.

இயற்கை - செயற்கை அரண்கள்

இவ்வகை அரண்கள் இயற்கையான அரண்களின் துணை கொண்டு அதன் மேல் அமைக்கப்படும் செயற்கை அரண்கள் ஆகும். உதாரணமாக, தமிழகத்தின் பெரும்பகுதிகளில் இயற்கையாகவே அமைந்த மலையின் மேல் மன்னர்கள் செயற்கையாகக் கோட்டைகளைக் கட்டித் தங்களைப் பாதுகாத்துக் கொண்டனர். இவ்வகை அரண்கள் இயற்கை - செயற்கை அரண்கள் எனப்படும். இவை அனைத்தும் பிற்காலத்தில் எழுப்பப்பட்டவை ஆகும்.

திண்டுக்கல், நாமக்கல் முதலிய மாவட்டங்களில் உள்ள மலைக்-கோட்டைகள் சிறந்த கோட்டை அரண்களாக விளங்கின. பகைவர்கள் எளிதில் ஏறமுடியா உயர்வும் திண்மையும் கொண்டன. மலைகளை இணைத்துக் கட்டப்பட கோட்டைகள் சிறந்த அரண்களாக விளங்கின. சங்க இலக்கியத்தில் இப்படிப்பட்ட மலைக்கோட்டைகள் இருந்தமைக்குச் சான்றுகளில்லை.

செயற்கை அரண்கள்

செயற்கை அரண் என்பது மனித முயற்சியால் உருவாக்கப்படுபவை ஆகும். இவற்றில் அகழிகள், கோட்டை அரண்கள், பொறிகள் முதலானவை அடங்கும். மேலும் காவற்காடுகளில் ஏற்படுத்தப்படும் புதை குழிகள், தாக்கும் பொறிகள், எந்திரப் புழை முதலானவையும் இதில் அடங்கும்.

அகழி அல்லது கிடங்கு

இயற்கையான நீரரண் இல்லாத இடங்களில் செயற்கையான நீர் நிலைகளை அரணாக அமைத்துக் கொள்ளும் வழக்கம் தமிழர்களிடையே இருந்தது. இவ்வகை அரண்கள் அகழி எனவும், கிடங்கு எனவும் அழைக்கப்படுகின்றன. இவ்வகை அரண்களை இலக்கியங்கள்,

"மணிநீர்க் கிடங்கு" (மதுரை. 351)
"குண்டு கிடங்கு" (மதுரை. 64)
"கல்லகழ் கிடங்கு" (மலை. 90-91)
"குண்டகழி" (புறம். 18)

என்பன போன்ற பெயர்களில் குறிப்பிடுகின்றன. இவ்வகை அகழி கல் தரையைப் பிளந்து ஆழமாக அமைக்கப்பட்டது. மேலும் அவை நீர்வரும் வாய்களைக் கொண்டிருந்தன. அவற்றை மதுரைக்காஞ்சி,

"கல்லிடித்தியன்ற இட்டுவாய்க் கிடங்கு" (மதுரை.730)

எனக் குறிப்பிடுகின்றது. அதுமட்டுமன்று! மதிலைச் சூழ்ந்திருந்த ஆழம் மிக்க அகழிகள் பெரிய முதலைகள் நிறைந்ததாக இருந்தன. அகழி நீர் நீல

நிறமுடையதாக இருந்தது. அதில் வளைந்த கால்களையுடைய முதலைகள் இரைதேடி இங்கும் அங்கும் திரிந்து கொண்டே இருந்தன. இதனை மலைபடுகடாம்,

"இரைதேர்த்தி வரும் கொடுத்தாள் முதலையொடு
திரைபடக் குழிந்த கல்லகழ் கிடங்கு" (மலை. 90-91)

எனக் குறிப்பிடுகின்றது.

அகழியின் இலஞ்சிகளில் (மடு) ஆழமான பகுதியில் உள்ள முதலைகள், இரவில் காவல் புரிவோர் கையில் உள்ள தீப்பந்தத்தின் நிழல் நீரில் விழும் போது அந்நிழலையும் இரையெனப் பாய்ந்து கவ்வும் இயல்பை உடையன என்பதை,

"இடங்கருங் குட்டத்துடன்றெக் கோடி
யாமங் கொள்பவர் சுடர்நிழற் கதூஉம்
கடுமுரண் முதலைய நெடுநீ ரிலஞ்சி..." (புறம். 37)

என்று புறநானூறு எடுத்துரைக்கின்றது.

மேலும் கராம் என்பது முதலையுள் ஒருவகை சாதியென்றும் அகழிகளில் பெரும்பாலும் இக்கராம் முதலைகள் நிறைந்திருக்கும் என்றும் தெரிகிறது. இக்கராமானது சிறுவர்கள் விளையாடும் போது கலங்கிவிடக் கூடிய அளவுக் குறைந்த நீரிலும் வலிமைமிக்க யானையையே கொன்று வீழ்த்தும் இழுப்பாற்றல் உடையது என்பதை

"ஊர்க்குறு மாக்க ளாடக் கலங்கும்
தாட்படு சின்னீர்க் களிறட்டு வீழ்க்கும்
ஈர்ப்புடைக் கராஅத் தன்ன..." (புறம். 104)

என்று புறநானூறு சுட்டுகின்றது.

இவ்வகை கடப்பதற்கு அரிய அகழியைப் படகுகளில் மட்டுமே முற்றுகைப் படைகள் கடந்தாக வேண்டும். திரை உண்டாகும் அளவிற்கு ஆழமுடையனவாக அகழிகள் இருந்தன. (உ.ம்)

"திரை படக்குழிந்த கல் அகழ்கிடங்கின்
வரைபுரை நிவப்பின் வான்தோய் இஞ்சி" (மலை. 91-92)

கோட்டை மதில் அரண்கள்

கோட்டைக்குரிய அங்கங்களில் சிறந்தது மதில் ஆகும். ஒரு நாட்டிற்கு அதன் மதில்கள்தான் சிறந்த அரண்களாக விளங்கின. கோட்டை மதிலினை இலக்கியங்கள்,

'இஞ்சி' - (பதிற். 25/புறம். 341)
'புரிசை' - (புறம். 17,224)
'எயில்' - (புறம். 3,6)
'நொச்சி' - (தொல். பொருள்.)

முதலிய பல பெயர்களில் குறிப்பிடுகின்றன. இவ்வகைக் கோட்டை அரணுக்கு இலக்கணமாகத் திருவள்ளுவர் கோட்டையானது பகைவர் ஏறமுடியா உயரமும், காவல் நிற்க இயங்க வசதியான அகலமும், இடிக்கமுடியாத வலிமையும், கடக்க முடியாத பொறிகளின் அருமையும் உடையதாய் இருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்.

"உயர்வகலம் திண்மை அருமைஇந் நான்கின்
அமை வரண் என்றுரைக்கும் நூல்" (குறள். 743)

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தஞ்சையில் இயற்கை அரண்கள் இல்லாமையால் உயர்ந்த மதில்களை உண்டாக்கினர் சோழ மன்னர்கள். எனவே இந்நகரை "இஞ்சி சூழ் தஞ்சை" எனத் திருவிசைப்பா பாடிற்று. ஒய்மா நாட்டு நல்லியக்கோடன் தன் நாட்டில் பெரிய மதில் சூழ்ந்த அரணைக் கட்டியிருந்ததனால் அது 'எயில்பட்டினமானது' என்பதை நல்லூர் நத்தத்தனார்,

"மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவின் பட்டினம் படரின்" (சிறு. 152-153)

எனக் குறிப்பிடுகின்றார்.

ஏழெயில் என்ற குறுநில மன்னனின் கோட்டையை நலங்கிள்ளி சோழன் முற்றுகையிட்டான். ஏழு மதில்களால் அரண் செய்யப்பட்ட வலிய கோட்டையை எளிதாகக் கைப்பற்றிய நலங்கிள்ளியின் வீரத்தை வியந்து பாடினார் கோவூர் கிழார் என்ற சங்கப்புலவர்.

"தென்னம் பொருப்ப என்னாட் டுள்ளும்
ஏழெயிற் கதவ மெறிந்துகைக் கொண்டுநின்...." (புறம். 33)

இக்காலத்தில் ஏழெயில் என்ற ஊர் 'ஏழுபொன் கோட்டை' என அழைக்கப்படுகின்றது. எயில் என்னும் பெயருடைய ஊர்களும் தமிழகத்தில் சில உண்டு. திருவாரூருக்கு அருகே பேரெயில் என்று இருந்த ஓர் ஊர் பிற்காலத்தில் பேரெயிலூர் ஆயிற்று. இப்போது பேரையூர் என அழைக்கப்படுகின்றது. இவ்வூரைச் சார்ந்த பழம் புலவர் ஒருவர் 'பேரெயில் முறுவலார்' என்று பெயர் பெற்றார். மேலும், 'காணப்பேரெயில்' என்ற தொடரும் ஆராயத் தக்கதாகும்.

கோட்டைச் சுவர் அமைப்பு

"கோட்டையின் சுவர்கள் மிகவும் வலிமைவாய்ந்து காணப்படும். அகழியின் ஆழத்தைப் பொறுத்து கோட்டையின் சுவர்கள் உயர்த்திக் கட்டப்பட்டன" மேலும் இதன் சுவர்கள் சிகப்புக் களிமண்ணால் பூசப்பட்டிருந்தன. எனவே இவை வெயிலில் தாமரைத் தகடுபோல சிவந்து மின்னின.

"செம்பியன் றன்ன செஞ்சுவர்" (மதுரை. 485)
"செம்புறழ் புரிசை" (அகம. 375)
" செம்படுத்த செழும்புரிசை" (தேவாரம்)
"செம்புகொண் டன்ன விஞ்சி" (சிறு. 439)

புறநானூறு 'இஞ்சி' என்ற மதில் அமைப்பைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. மேற்புறத்தில் செம்பை உருக்கிச் சாந்தாக வார்த்துக் கருங்கல்லால் கட்டப்பட்ட அறைகளைக் கொண்ட அமைப்பை 'இஞ்சி' எனக் கருதலாம். இதனை,

"செம்புனைந் தியற்றிய சேஎனொடும் புரிசை
உவரா வீகைத் துவரை யாண்டு" (புறம். 201)

என்ற பாடல்அடிகள் மூலம் அறியலாம்.

வாயிலின் அமைப்பு

மதுரை மூதூர் நகருக்குப் பாதுகாப்பு அளித்த மதிலுக்கு அணி செய்யும் விதமாக அதன் வாயில்கள் அமைந்திருந்தன. இதற்கு நெய் பூசப்பட்டதால் கருமை நிறம் வாய்ந்த திண்ணிய கதவு போல காட்சியளித்தது. "நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்" (மதுரை. 354).

மேலும் வாயில்கள் யானைகள் செல்லும் அளவிற்கு உயர்ச்சி உடையதாகவும், கதவுகள் சாதிலிங்கம் வழிக்கப்பட்டுத் தாழ்பொருத்தப்பட்டும் இரு புறத்தும் செங்கழுநீர்ப்பூவும், வலிய கைப்பிடியும் கொண்டனவாகவும் விளங்கின. இப்படிப்பட்ட வாயில்களைப் பகைவர்கள் கடந்து வருதல் எளிதானதன்று.

இவ்வகை வாயில்களைக் கடப்பதற்கு யானைகள் பயன்படுத்தப்பட்டன. கோட்டையின் மதிற்கதவுகளை யானைகள் உடைத்து வழி உண்டாக்கியதும் ஏனையப்படைகள் மதிலுக்குள் புகுந்து போரிட வாய்ப்பாக அமையும். இதனை இலக்கியங்கள் யானை எயிற்கதவம் பாய்தல் என்கின்றன. (உ.ம்)

"கடுங்கண்ண கொல்களிற்றாற்
காப்புடை வெழுமுருக்கி...." (புறம். 14)
"களிறு கதவெறியாச் சிவந்துரா அய்" (புறம். 4)

எனவும் இவை குறிப்பிடப்பெற்றுள்ளன.

கோட்டையின் வாயிலின் அருகில் சில விசித்திரமான பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அவை பந்துகளும் பொம்மைகளும் ஆகும். இதற்குக் காரணம் எந்தப் பகைவனுக்கும் அவற்றை எடுத்துச் செல்ல துணிவில்லை என்பது பொருள் என நக்கீரர் குறிப்பிடுகிறார்.

"வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர் அருவாயில்..." (முருகு. 68)

இதனைச் சற்று மாற்றி சிலம்பு, பசும்புல் கட்டு முதலியவற்றைச் தொங்க விடுதலும் உண்டு.

"செம்பொறிச் சிலம்பொ டணித்தழை தூங்கும்" (பதிற். 53)

மேலும் "அரசனுடைய அரண்மனை வாயிலில் மகளிர் போன்று பொம்மைகளை வைத்து அவற்றின் கைகளில் பந்துகளை இட்டு வைப்பது தமிழர்களின் பழக்கம்" ஆகும்.

அகப்பா

உயர்ந்த கதவுகளும் அதனை அடைத்துக் குறுக்காகத் தாங்கி நிற்கும் மரத்தூண்களும் அகழிகளைக் கடக்க உதவும் தொங்கு நிலைப் பாலமும் கடிமிளையும், அகழியும், நெடுமதிலும் முதலானவை அடங்கியவை அகப்பா எனப்படும். இத்தகைய அரிய அரணைப் பல்யானைச் செல்கெழுகுட்டுவன் நாற்படையுடன் சென்று வென்றான் என்ற செய்தியினைப் பாலைக் கௌதமனார் குறிப்பிடுகிறார்.

".... ஓங்குநிலை வாயிற் றூங்குபு தகைத்த
வில்விசை மாட்டிய விழுச்சீ ரையவிக்
கடியிளைக் குண்டு கிடங்கின்
நெடுமதில் நிரைப்பதணத்
தண்ணலம் பெருங்கோட் டகப்பா வெறிந்த ..." (பதிற். 22)

மேலும் குட்டுவன் வழிவந்த இளங்கோ அடிகளும் தம் காவியத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"மிகப்பெருந் தானையோ டிருஞ்செரு வோட்டி
அகப்பா எறிந்த அருந்திறல்..." (சிலம்பு. 28-143)

எனவே அகப்பா என்பது அரணுக்குள் அரணாகப் பல அரண்களை உடையது என்பதை அறிய முடிகின்றது.

சிலப்பதிகாரம் உணர்த்தும் மதிற்பொறிகள்

சிலப்பதிகாரத்தில் மதுரை மாநகரின் எயில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. மதுரை மாநகரைச் சுற்றி அரிய காவற்காடு, அகழிகள், மதிற்பொறிகள் முதலானவை இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இதில் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட காப்புப் பொறிகள் காணப்படுகின்றன.

1. மிளை - இது கோட்டைக்குப் புறத்தே அமைக்கபட்டிருக்கும் காவற்காடு ஆகும்.
2. அகழி - இது மதிலின் புறத்தே அமைக்கப்பட்டிருக்கும் நீர் நிறைந்த பகுதி ஆகும்.

3. வளைவிற் பொறி - இப்பொறியானது மதிலினைச் சுற்றிவளைத்த பகைவர்களின் படைகள் மீது வில் மூலம் அம்புகளை உமிழும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும்.

4. கருவிரல் ஊகம் - கரிய விரல்களை உடைய குரங்கு போன்ற பொறி

5. கல் உமிழ் கவண் - இக்கருவி பெரும் கற்குவியல்களை எதிரிப்படையின் மீது வாரி இறைக்கும் விதமாக அமைக்கப்பட்டிருக்கும்.

6. பரிவுறு வெந்நெய் - இக்கருவி மதிலின் மேற்புரத்தில் நெய்யினைக் கொதிக்கவைத்து, அதன் மீது ஏறும் பகைவர் மீது ஊற்றும் விதமாக அமைக்கப்பட்டிருக்கும்.

7. பாகு அடுகுழிசி - இது எண்ணெய்க் காய்ச்சவும், செம்புருக்கவும், கரைத்த சாணி காய்ச்சவும், அதை ஊற்றி வைக்கவும், உதவும் மிடாக்கள் ஆகும். இது குழுசி எனவும் கூசி எனவும் அழைக்கப்படுகிறது.

8. காய்பொன் உலை - இது எஃகினை உருக்கிக் காய்ச்சுவதற்கு வைக்கப்பட்டிருக்கும் உலை ஆகும்.

9. கல் இடு கூடை - பகைவர்கள் மீது கல் எறியும் பொறிக்குக் கல்லிட வேண்டி வைக்கப்பட்டிருக்கும் கூடை ஆகும்.

10. தூண்டில் - அகழியைக் கடந்து மதிலைப் பற்றுபவரை மாட்டி இழுக்கும் தூண்டில் வடிவிலான பொறி.

11. தொடக்கு - மதில்மீது ஏறுபவர்களின் கழுத்தைப் பூட்டி முறுக்குஞ் சங்கிலிப் பொறி.

12. ஆண்டலை அடுப்பு - மதில்மேல் ஏறுவோர் தலையைக் கொத்தி மூளையைக் கடிக்கும் ஆண்டலைப்பொறி. ஆண்டலை - ஆண்மகன் தலை போன்ற ஒருவகைப்பறவை போல் இருப்பதால் ஆண்டலைப் புள் எனப்படுகிறது. மேலும் அடுப்புக்கல் போல மூன்றும் ஒன்றாக இருப்பதால் ஆண்டலை அடுப்பு எனப்பட்டது.

13. கவை - மதில் மேல் ஏறுவோர் கழுத்தில் வைத்துக் கீழே தள்ளும் ஒருவகை இரும்புக் கவை ஆகும்.

14. கழு - கழுக்கோல். கூரான குத்தீட்டிப் போன்றது.

15. புதை - அம்புக்கட்டுகள், அம்புகள் வைக்கப்பட்டிருக்கும் கருவி

16. புழை - கோட்டைச் சுவரில் வில்லவர்கள் நின்று பகைவர்

மீது அம்பு மழை பொழிவதற்கு வசதியாகக் கட்டப்பட்டிருக்கும் சிற்றறைகள் ஏப்புழை / புழை எனப்படும்.

17. ஐயவித்துலாம் - தன்னை நெருங்கினார்த் தலையை நெருக்கித் திருகும் மரக்கருவி; சிற்றம்புகள் வைத்து எய்யும் இயந்திரம் ; அம்புத்திரள் தொங்கவிட்ட விட்டம் எனப் பல பெயர்களில் குறிப்பிடப்படுகின்றது.
"வில்விசை மாட்டிய விழுச்சீர் ஐயவி" (பதிற. 22)

18. கைபெயரூசி - மதிலின் தலையைப் பற்றுவார் கையைப் பொதுக்கும் ஊசிப்பொறி ஆகும்.

19. ஏறி சிரல் - பகைவர்மேற் சென்று அவர் கண்ணைக் கொத்தும் சிச்சிலிக்குருவி வடிவிலான பொறி.

20. பன்றி - மதிலைப் பற்றுபவரைக் கொம்பினால் குத்தும் / கிழிக்கும் பன்றி வடிவிலான பொறி அமைப்பு.

21. பணை - மதிலைப் பற்றுபவரை அடிக்கும் மூங்கில் வடிவப் பொறி.

22. எழுவும் சீப்பும் - கதவிற்கு வலியாக உள்வாயிற்படியிலே நிலத்தில் வீழத் தள்ளும் மரங்கள்.

23. கோல் - விட்டேறு அல்லது எறிகோல்

24. கணையம் - கோட்டையின் மதிற் கதவுக்குத் தடையாக குறுக்கே இடும் உத்தரம் / சீப்பு அகப்படக் குறுக்கே போடப்படும் மரம்.
"முழுவிறற் கணையம்" - (சிலம்பு. 15:215)

25. குந்தம் - சிறு சவளம், குண்டாந்தடி போன்றது.

26. வேல் - ஈட்டி வரிசை முதலியனவாகும்.

பிற : ஞாயில் - குருவித்தலை என்னும் மதில் உறுப்பு. ஒப்புழைக்கு நடுவாய் எய்துமறையும் (சீவக. 105) கோட்டை மீதுஅமைக்கப்பட்டிருக்கும் படைஞர் நிற்கும் சீறிடம் ஞாயில் எனப்படும்.
"மீன்பூத் தன்ன வுருவ ஞாயில்" (புறம். 21)

முதலியன சிலம்பில் கூறப்பட்ட 26 வகை பொறிகளாகும்.

"மிளையும் கிடங்கும் வளைவிற் பொறியும்
கருவிர லூகமும் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்
காய்பொன் உலையும் கல்லிடு கூடையும்
தூண்டிலும் தொடக்கும் ஆண்டலை அடுப்பும்

முழு முதல் அரண்



பண்டைத் தமிழர்களின் முழு முதல் அரண்கள்
(சிலப்பதிகாரம்)



தமிழர்களின் கோட்டை வாயில் முகப்பு அரண்



கவையும் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமும் கைபெயர் ஊசியும்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்
எழுவுஞ் சீப்பும் முழுவிறற் கணையமும்
கோலும் குந்தமும் வேலும் பிறவும்....'' (சிலம்பு. 15 : 207-18)

இப்பாடலின் இறுதியில் 'பிறவும்' எனக் குறிப்பிட்டுள்ளதால், தேவநேய பாவாணர் மேலும் ஒன்பது பொறிகள் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். அவை:

27. ஞாயில் 28. நூற்றுவரைக் கொல்லி
29. தள்ளிவெட்டி 30. விழுங்கும் பாம்பு
31. புலிப்பொறி 32. குடப்பாம்பு
33. சகடப்பொறி 34. தகர்ப்பொறி
35. அரி நூர்ப்பொறி

இவ்வாறு நாட்டினையும், மக்களையும், அரண்மனையையும் பாதுகாக்கப் பண்டைத் தமிழ் மன்னர்கள் தங்களுடைய மதிநுட்பத்தால் பெரும் அரண்களையும், பாதுகாப்புப் பொறிகளையும் சிறப்பான முறையில் கையாண்டுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது. இந்த அரண்கள் போர்க்காலங்களில் பயன்படுவன. மற்ற பிற காலங்களில் 'கடிமிளை' முதலானவற்றை ஏற்படுத்தித் தங்களைப் பாதுகாத்துக் கொண்டனர்.

முடிவுரை

பழந்தமிழர் வளங்கள், மிருகங்கள், இயந்திரங்கள் முதலான-வற்றைத் தங்கள் வசப்படுத்திச் சிறந்த பாதுகாப்பு அரண்களாகப் பயன்படுத்திக் கொண்டனர். அதுமட்டுமன்று, கட்டிடக் கலையில் சிறந்து விளங்கிய தமிழர்கள் தங்கள் கோட்டை மதிலில் பல கருவிகளைப் பொருத்தியும், பல ரகசிய அம்பேவும் அறைகளையும், கண்காணிப்பு அறைகளையும் பகைவர்கள் அறிய முடியாதபடி அவர்களைத் தாக்கும் வகையில் அமைத்துக் கட்டப்பட்ட பொறிகளையும் அமைத்து அரண்களை உண்டாக்கியிருந்தனர்.

தமிழர்கள் எந்த அளவிற்குக் காவல் அரண்களை அமைப்பதில் கைதேர்ந்திருந்தனரோ அதே அளவிற்கு அதனை அழித்துக் கடந்து செல்வதற்கான ஆற்றலையும் பெற்றிருந்தனர் என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. சங்கப் பாக்களில் காணப்படும் பொறிகளை விடச் சிலப்பதிகாரக் காலத்தில் போர்க் கருவிகளும் அரண் பொறிகளும் பன்மடங்கு வளர்ச்சி பெற்றுப் பல புதுப்புது பாதுகாப்புப் பொறிகள் பயன்படுத்தப் பட்டிருந்ததை அறிய முடிகின்றது.

பெருமழைப் புலவரின் மேற்கோள் திறன்

பேரா. அருள்செல்வன்
அண்ணாமலைநகர்

பெருமழைப்புலவர் என அழைக்கப்படும் பொ. வே. சோமசுந்தரனார், அகநானூற்றின் பாடல்களுக்கு இலக்கண நூலினையும், சங்க இலக்கியங்களையும் மேற்கோள்களாகப் பயன்படுத்தியுள்ளார். இவரின் மேற்கோள் திறனை இலக்கண மேற்கோள், இலக்கிய மேற்கோள் என இருவகைப்படுத்தலாம். அகநானூற்றின் பாடல்களுக்கு மேற்கோள்களை எவ்வாறு பயன்படுத்தியுள்ளார் என்பதனை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

மேற்கோள்

மேற்கோள்கள் என்பது சுருக்கமாகவும் சிந்திக்கப்படும் கருத்துடன் ஒட்டிய உறவுடையதாகவும் இருக்க வேண்டும். மேற்கோள்களைத் தேவை கருதி அளவாகப் பயன்படுத்த வேண்டும். இம்மேற்கோள்கள் உரையாசிரியர்களின் புலமையைக் காட்டும் விதமாக அமைகின்றன. மேற்கோள் என்பது உப்புப் போல் இருக்க வேண்டுமே தவிர, அதுவே உணவாகி விடுதல் கூடாது என்பர். இந்த மேற்கோள்கள் கருத்துரைஞர் நிகழ்த்தும் ஆய்வுக்கு அரண் சேர்க்கும், பிற அறிஞர் தம் கருத்துகளாக அமைவனவாகும். இவற்றை இனங்காட்ட மேற்கோள் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை (' ') ஒற்றை மேற்கோள் (" ") இரட்டை மேற்கோள் என இருவகைப்படும்.

மேற்கோளின் தேவை

சிறந்த இரு நூலினை எடுத்து ஆய்வு செய்யும் பொழுது மேற்கோள்கள் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றன. ஒன்றிற்கும் மேற்பட்ட பல நூல்களையும் மேற்கோள்களாக எடுத்துக்காட்டலாம். எளிதில் விளக்கம் தரவேண்டிய இடங்களுக்கும், உதாரணம் தேவைப்படும் இடத்திற்கும் மேற்கோள்களின் பயன்பாடு போதுமானதாக அமைகின்றன. மேற்கோள்களின் மூலம் கருத்துச் சிக்கல்களுக்குத் தீர்வுகாண முடிகின்றது. மிகவும் நன்றாக அறியப்பட்ட உண்மைகளுக்கு மேற்கோள்கள் தேவை இல்லை.

மேற்கோள்களின் பயன்

உரைகள், பதிப்புகள், ஆய்வுகள் எனும் ஆய்வுகளில் தேவைப்படும் இடங்களில் ஒரு கருத்தை வலியுறுத்தவோ, மறுத்துரைக்கவோ மேற்கோள்

பயன்படுகிறது. மேற்கோள்களை எடுத்தாளும் பொழுது மிக சுருக்கமாகத் தரவேண்டும். மேற்கோளைப் பயன்படுத்தும் பொழுது மாற்றமோ, திருத்தமோ செய்யாமல் அவ்வாறே எடுத்தாள வேண்டும். ஒவ்வொரு மேற்கோளினையும் இரட்டை மேற்கோள் குறிக்குள் அமைக்கப்பட வேண்டும். மேற்கோள்களில் மிக அதிகமான மேற்கோள்கள் அல்லது மிகக் குறைவான மேற்கோள்கள் இரண்டும் தவிர்க்க வேண்டியதாகும்.

அகநானூற்றில் மேற்கோள்கள்

அகநானூற்றுக்கு உரை எழுதும் பொழுது பெருமழைப்புலவர் ஒவ்வொரு பாடலுக்கும் தொல்காப்பியப் பொருளதிகார நூற்பாவை மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளார். சில பாடல்களுக்குச் சங்க இலக்கிய நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டுச் செய்யுள்களை மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளார்.

சங்க இலக்கிய மேற்கோள்

நற்றிணை (132), குறுந்தொகை (160), ஐங்குறுநூறு (160), அகநானூறு (136), புறநானூறு, கலித்தொகை (5), மதுரைக்காஞ்சி (44), சிறுபாணாற்றுப்படை (17), பெரும்பாணாற்றுப்படை (126), பட்டினப்பாலை (141) முதலிய நூல்களை மேற்கோள்களாகப் பயன்படுத்தியுள்ளார்.

இலக்கண மேற்கோள்

1. தொல்காப்பியம்
2. புறப்பொருள் வெண்பாமாலை, பா. 31 (மணிமிடை)
3. யாப்பருங்கல விருத்தி, பா.13 (மணி மிடை)

முதலிய இலக்கண நூல்களையும் பெருமழைப்புலவர் மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளார். இவற்றுள் தொல்காப்பிய நூற்பாக்களை அனைத்துப் பாடல்களுக்கும் மேற்கோள்களாகத் தருகிறார். அதற்கு விளக்கத்தைக் கொடுக்கவில்லை. நூற்பாவைக் கொடுத்து, இதனை எனவரும் நூற்பாவால் அமைத்துக் கொள்க என்கிறார்.

திருக்குறளை மேற்கோளாகக் காட்டுதல்

தொல்காப்பியத்திற்கு அடுத்ததாக, திருக்குறளை மிகுதியாக மேற்கோள்களாகப் பயன்படுத்தியுள்ளார். அகநானூற்றின் 4, 25, 26, 28, 30, 31, 33, 45, 46, 66, 69 போன்ற பிற பாடல்களுக்கும் திருக்குறளைப் பயன்படுத்தியுள்ளார். 'நாற்றமும் தோற்றமும்' எனவரும் நூற்பாவை 26 பாடல்களுக்கும் மேலாக மேற்கோள் காட்டியுள்ளார் (பா. 2, 10, 12, 20, 28, 30, 32, 38, 42, 48, 68)

கரணத்தினமைந்து எனத் தொடங்கும் நூற்பாவை (பா. 19, 21, 24, 29, 33, 34, 39, 41, 43, 44, 51, 54, 57, 64, 75, 77) எனும் பாடல்களுக்குப் பயன்படுத்தியுள்ளார்.

"குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்த் தன்ன வாங்குவள் பரிய"

எனவரும் அகநானூற்றுப் பாடலானது, வினைவயிற் பிரிகின்ற தலைவன், கார்ப்பருவத் தொடக்கத்திலேயே மீண்டு வருவேன், அதுவரை ஆற்றிருந்திடுக என்று கூறிச் செல்கிறான். தலைவி அவனது பிரிவால் மிகவும் வருந்துகிறாள். இதனை, பெருமழைப்புலவர்,

'பெறற்கரும் பெரும்பொருள்' எனத் தொடங்கும் தொல்காப்பிய நூற்பாவில் 'வகைபட வந்த கிளவி' என்பதனால் அமைத்துக் கொள்க என்கிறார். வகைபட வந்த கிளவி என்பது தோழிக்கூற்று வருமிடங்களைச் சுட்டுவதாகும். இதனை இளம்பூரணர் வகைப்படுத்திக் கூறுகிறார். அவை,

பிரிந்த தலைமகன் வருவனெனக் கூறுதலும், பருவங்கண்டு கூறுதலும், வற்புறுத்தலும், நிமித்தங்கண்டு கூறுதலும், வந்தான் எனக் கூறுதலும் என வகைப்படுத்தி இது கற்பியலுக்கே உரியது எனக் கூறுகிறார்.

மேலும் நச்சினார்க்கினியர் தோழிக்கூற்றில் தலைவிக் கூற்றினுள் அடங்குவதன்றி வேறு சொற்களும் தோழிக்கு உரியதென்று குறிப்பிடுகிறார். இவ்வுரையாசிரியர்களின் விளக்கங்கள் பெருமழைப்புலவர் குறிப்பிடும் விளக்கத்திற்குப் பொருந்தி வந்துள்ளன. இப்பாடலுக்குத் திருக்குறளையும் மேற்கோளாகக் குறிப்பிடுகிறார்.

"அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை"

எனவும் வரும் திருக்குறள்களையும் நினைக என்கிறார்.

பிற உயிருக்கு வரும் இன்னாதவற்றைத் தம் உயிருக்கு வந்தது போல் குறிக்கொண்டு காத்து இருத்தலும், நடத்தல், இருத்தல், கிடத்தல், உண்டல், நிற்றல் முதலிய ஐந்தொழில்களாலும் பிற உயிர்களுக்கு வருவனவற்றை முன்னரே அறிந்திருத்தலும் பெரும்பாலும் அஃறிணைக்கே உரியதாகும் என்பது திருக்குறளின் கருத்தாகும். இதனைப் பெருமழைப்புலவர் தலைவிக்கு உரியதாகக் குறிப்பிடுகிறார்.

மூதூரின் சிறப்பு

பாண்டிய நாட்டிலுள்ள அழும்பூர் என்னும் மூதூரில் பல்வேறுபட்ட பழைய நெல் நிரப்பப்பட்ட கூடுகளும், பல குடிகளையுடைய நிலப்பரப்பும் மிகுதியாக உள்ளன. போரில் வெற்றிகண்ட சோழமன்னன் குடவாயில்

என்னும் ஊரைப் போன்ற அழகு மிகுந்த தலைவியைக் காண தேரை விரைந்து செலுத்துகிறான். இதனை,

"யழும்பி லன்ன வறாஅ யாணர்ப்
பழம்பன் னெல்லின் பல்குடிப் பரவைப்
பொங்கடி படிகய மண்டிய பசுமிளைத்
தண்குட வாயி லன்னோட்
பண்புடை யாகத் தின்றுமால் பெறவே"

இப்பாடலுக்குப் பெருமழைப்புலவர் மேற்கோளாக மதுரைக்காஞ்சியைக் குறிப்பிடுகிறார்.

"நிலனும் வளனும் கண்டமை கல்லா
விளங்குபெருந் திருவின் மான விறல்வேள்
அழும்பில் அன்ன நாடிழந் தனரும்"

என்பதன் மூலம் உணரலாம் என்கிறார் பெருமழைப்புலவர். இப்பாடலில் தலைவிக்கு உவமையாகக் குடவாயில் என்னும் ஊரைப் பெருமழைப்புலவர் குறிப்பிடுகிறார். குடவாயில் என்னும் ஊர் நீர்வளம் நிறைந்து செழிப்புடன் காணப்படும். இவ்வூர் வளம் சிறந்த ஊர் என்பதற்கு,

"குழையாரும் பைம்பொழிலும் வயலும் சூழ்ந்த குடவாயில்"

என்னும் திருஞானசம்பந்தர் தேவாரத்தை மேற்கோளாகக் காட்டுகிறார்.

கரிகால் சோழனின் சிறப்பு

வயிறோம்பற் பொருட்டு குடிமக்கள் வேற்று நாட்டிற்குச் செல்வர். அவ்வாறு செல்லாமல் அவர்களை நிலைநிறுத்தி சோழநாட்டிலுள்ள காடுகளை நாடாக்கி குளங்கள் தோண்டி வளத்தைப் பெருக்கினான். கோயில்கள் கட்டி நாட்டை விட்டு புறப்படவிருந்த குடிமக்களை நிலை நிறுத்தினான். இதனை,

"செல்குடி நிறுத்த பெரும் பெயர்க் கரிகால்
வெல்போர்ச் சோழ னிடையாற் றன்ன
நல்லிசை வெறுக்கை தருமார்"

எனும் பாடல் உணர்த்துகிறது. இதற்கு மேற்கோளாகப் பட்டினப்பாலையைக் குறிப்பிடுகின்றார்.

"காடு கொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம் பெருக்கிப்
பிறங்கு நிலைமாடத் துறந்தை போக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ"

இப்பாடலில் தலைசிறந்த புகழ்களில் குடியோம்பலால் வரும் புகழே பெரும்புகழ் என்று கடியலூர் உருத்திரங் கண்ணனார் குறிப்பிடுகின்றார்.

அகநானூற்று உரையில் இலக்கண, இலக்கிய மேற்கோளைக் கையாண்டு, இவ்வுரையை எளிதில் விளங்க வைத்துள்ளார். தொல்காப்பிய நூற்பாக்கள் ஒவ்வொரு பாடலுக்கும் காட்டியிருப்பது இவரது உரை நெறியாகும். இலக்கண மேற்கோள்களைப் பயன்படுத்தியிருப்பது இவரது இலக்கணப் புலமையைப் புலப்படுத்துகிறது. இலக்கிய மேற்கோள்களைக் கொண்டு விளக்குவதால் பெருமழைப்புலவரின் பரந்துபட்ட இலக்கியப் பயிற்சியினை அறியமுடிகிறது. ஒரே பாடலுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட இலக்கண, இலக்கிய மேற்கோள்களையும் தந்து உரையைச் செம்மைப் படுத்தியுள்ளார். இவ்வுரை, தொல்காப்பியப் பொருளதிகாரத்தோடு ஒப்பிட்டு ஆய்வதற்குத் துணை செய்யும். மேலும், அகநானூற்றுப் பாடல்கள் சங்க இலக்கியங்களின் கருத்துக்களோடு ஒத்த பண்புடையனவாகவும் தொல்காப்பிய நெறிகட்கு உட்பட்டு அமைவனவாகவும் இருப்பதாகப் பெருமழைப்புலவர் கருதியிருப்பதாயும் உணரமுடிகிறது.

வாசகர் வாசகம் (1)

வள்ளலாரின் புகழ்போற்றும் படச்செய்தி, உவகை !
விள்ளல்நற் கனிச்சுவைவெல் இதழ்மணம்,மீ உவகை !
வள்ளலார்தம் படைப்புபோக்கு சொல்தொடர்சீர் உவகை !
எளியேனின் கட்டுரைகம் பர்கவியின் கவினும்,
விளைநட்புக் குறளுவமை பனைபோற்றும் பாட்டும்,
களங்கண்ட புதுக்கவிதை ஆய்வுரைக்கும் போக்கும்,
விளைகொடுமை வீழ்த்துபாவை முன்வைத்த பொதுவும்,
விழைநூல்சாக் ரடீசுகற்கை விவரிபாவும் தந்தீர்!

கைந்நிலையில் அகம்ஆயும் கட்டுரையும், செந்தமிழ்
கடந்ததிங்கள் இதம்பதம்பொற் குவியலின்நேர் பா,உரை,
பைந்தமிழில் வைத்தநலம் பாராட்டும் வாசகம்,
பையநடை பயில்தென்றல் பொதிகையின்மேல் வீசும்
ஏந்துபுகழ் நிலைகாட்டி நெஞ்சினிலே இனிக்கும்!
இணைஉளதோ, இலக்கியமும் இலக்கணமும் ஆய்வும்
ஏந்திதிங்கள் தொறும்விருந்தை அளிக்கும்செந் தமிழ்க்கே?
ஈரமண்வேர்க் கொடைமணப்பூ வினைவெலும்செந் தமிழே!

புலவர் சி. பாண்டுரங்கன்,
ஆம்பூர்.

பெயர்ப்பலகையில் தமிழ்

முனைவர். **மலையமான்**

நெற்றியிலே திருநீறு; உற்று நோக்கின் – அவர்
பற்றுள்ள ஒருசைவர் என்று காட்டும்
வெற்றிடத்தில் சூலம்போல் திருமண் சேர்ந்தால் – அவர்
முற்றியஓர் வைணவராம் ஆர்வம் நாட்டும்
உற்றஒரு பெயர்ப்பலகை தமிழில் கண்டால் – அது
உள்ளத்துத் தமிழ்உணர்வின் உண்மை நீட்டும்
சுற்றியுள நாடெங்கும் விளம்ப ரத்தில் – அவர்
சொந்தமொழி ஒன்றினுக்கே தலைமை கூட்டும்.

தொன்மைமிகு செவ்வியலாம் சிறப்பு கொண்ட – நெடுந்
தரணிஇதன் முதன்மொழியாம் பெருமை கண்ட
அன்னை மொழிதமிழினிலே எடுப்பாய், நீவிர் – இனி
அழகாகப் பெயர்ப்பலகை அமைப்பீர் – என்று
முன்பேஓர் அரசாணை வந்ததிங்கே அதை
மகிழ்ந்துள்ளம் போற்றியது இன்பம் பொங்க
நன்மைதரு அவ்வாணை நாணுமாறு – இவண்
நடைமுறையில் கோணல்கள் நாளும் சேரும்.

கீழ்வானில் சூரியனின் வரவை மெல்லப் – புடர்
கிழக்கினிலே வெளுப்பதுவே வாயால் சொல்லும்
வாழ்வதனைப் பெறுகின்ற பச்சைப் புல்லும் – மேகம்
வழங்குகின்ற மழைநீரின் வருகை சொல்லும்
தாழ்வின்றி உயர்வேற்றும் மொழியின் போக்கை – தினம்
தெரிவிக்கும் பலகை அது உணர்வை ஊக்கும்
ஆழ்ந்தாய்ந்தால் பெயர்ப்பலகை தமிழ் வளர்க்கும் – அது
அமுதான பெயர்ப்பலகை உணர்வீர் இன்றே!

ஏ.ஏ.ஹெச்.கே.கோரியின் படைப்புகளில் சமுதாயம்

இ. பூங்கொடி
முனைவர் பட்ட ஆய்வாளர்

ஏ.ஏ.ஹெச்.கே.கோரியின் படைப்பு வழி அவரது சமுதாயப் பார்வைகள் இக்கட்டுரையின் வாயிலாகக் கோடிட்டுக் காட்டப்படுகிறது.

- வறுமை
- குழந்தைத் தொழிலாளர் நிலை
- சமூகம்
- மனிதநேயம்
- வேலையில்லாத் திண்டாட்டம்

போன்ற சமூக நிலைகள் படைப்பாசிரியரின் கதைகளின் வழியாக நிறுவப்படுகிறது.

வறுமை

'காய்தல்' எனும் கதையில் வசதியாக வாழ்ந்த குடும்பம் வேலை-யின்மையால் வருமானமின்றி வறுமையில் வாடுகிறது. வீட்டிலுள்ள அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் ஏதாவதொரு காரணங்கூறி பக்கத்தில் நடக்கும் திருமண விழாவிற்கு வயிற்றுப்பிணி தீர்க்கச் சென்று விடுகின்றனர். குடும்பத் தலைவருக்கும் பசி வயிற்றைக் கிள்ளுகிறது. ஆனாலும் மனக்கட்டுப்பாட்டோடு இருக்கிறார். தனது கடைசி மகனைத் தேடிக்கொண்டு வருகிறார். அவ்வேளையில் குடும்பத் தலைவருக்குத் தெரிந்தவர் அவரையும் திருமண வீட்டிற்கு அழைத்துச் செல்கிறார். இதனைக் கண்ட கடைசி மகன் தந்தையும்தானே திருமண வீட்டில் உணவருந்தினார் எனத் தைரியமாகத் தலைகாட்டுகிறான்.

"சப்பளிஞ்சிபோன அலுமினியத் தட்டைத் தூக்கிக் கொண்டு மத்தியானம் ஓசியில் கிடைக்கும் அரசாங்க சாப்பாட்டுக்கு ஓடினான். வருஷத்தில் அத்தனை நாளும் பள்ளிக்கூடம் இருக்காதா என்று ஏங்கும் அளவுக்கு ஆர்வம் அவனுக்கு!" இளைய மகனின் மனநிலையை இவ்வாறு படைப்பாசிரியர் வெளிப்படுத்துகிறார்.

"கக்கூஸ்க்குப் போறாகளாக்கும்? நான் அந்தப்பக்கம் போயி ரெண்டு நாளாச்சி என்றாள் மூன்றாவது பெண் சரஸ்வதி. அவளின் தந்தை புறவாசலுக்குச் செம்பில் நீர் கொண்டு போவதைக் கண்டு இவ்வாறு ஏளனமாகப் பேசுகின்றாள். வறுமை தலைவிரித்தாடும் ஒரு குடும்பத்தின் வறுமை நிலையை எதார்த்தமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

பசி வந்தால் பத்தும் பறந்துபோகும் என்பதற்கு இக்கதை பொருத்தமாக அமைந்துள்ளது. நிழல் நிஜமாவதில்லை எனும் கதையில்

அன்றாட உணவிற்கே சிரமப்படும் குடும்பத்தில் தாய் தனது மகன் ஆறுமுகத்திடம் ரேசன் கடையில் அரிசி வாங்கி வரச் சொல்லி பணம் கொடுக்கிறாள். புதுப்படம் பார்ப்பதில் ஆர்வமுள்ள அவன் அப்பணத்தில் படம் பார்த்து விட்டு தனது தாயிடம் பணம் தவறி விழுந்து காணாமல் போய் விட்டதாகப் பொய்க்காரணம் கூறுகிறான். தனது மகன் பணம் தேடி அலுத்துப் போயிருப்பான் எனக் கவலை கொள்கிறாள் தாய். ஆறுமுகத்தின் தங்கை தான் சேமித்து வைத்தச் சில்லரைக் காசுகளை அண்ணனிடம் கொடுத்து பள்ளி செல்லும் போது கடையில் சாப்பிட்டுட்டு போண்ணா எனக் கூறுகிறாள். மேலும் எனக்குப் பசிச்சா கண்ணை மூடி தூங்கிவிடுவேன். நீ பள்ளிக்கூடத்தில் என்ன செய்வாய் எனக்கூறி அண்ணனின் சட்டைப் பைகளில் சில்லரைகளைப் போடுகிறாள்.

"வெறும் வயிற்றோடு தூங்கப் போகும் மகனையும் இரவு சாப்பிடப் போகிறோம் என்ற எதிர்பார்ப்பில் இத்தனை நேரம் கண்விழித்துக் கொண்டிருந்துவிட்டு, இப்போது ஏமாற்றத்தோடு நிற்கும் மகளையும் பார்க்கப் பார்க்க அந்தத் தாய்க்கு வேதனை குமுறிக் கொண்டு வந்தது".

தனது தங்கையைப் பட்டினிப்போட்டு விட்டோமே என ஆறுமுகம் வருந்துகின்றான். ப்ளாக்கில் டிக்கட் விற்று இக்கடனைத் தீர்க்க வேண்டுமென முடிவு செய்கிறான். காவலரிடம் பிடிபடுகிறான்.

"தனியொ ருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை யழித்திடுவோம்"

என்ற பாரதி வழிநின்று ஏ.ஏ.ஹெச்.கே.கோரி அவர்கள் பல கதைகளில் வறுமையைக் காட்டி நமது சிந்தனையைத் தூண்டி ஏற்றத்தாழ்வற்ற சமுதாயம் உருவாக வேண்டும் என்ற தமது ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றார்.

குழந்தைத் தொழிலாளர் நிலை

சிவகாசி தீப்பெட்டி தொழிற்சாலையில் குழந்தைத் தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். அடிக்கடி அங்கு தீ விபத்து ஏற்படினும் தமது உற்றார் உறவினர்களின் இறப்பினை அங்கு வேலை பார்ப்பவர்கள் நேரடியாகக் காண்கின்றனர். இருப்பினும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பவர்களின் எண்ணிக்கை மட்டும் குறைவதில்லை. 'மத்தாப்புக் கொளுத்தும் வயசு' எனும் கதையில் ஒரு சிறுவன் தீப்பெட்டி தொழிற்சாலையில் தான் வேலை பார்ப்பதாகவும் போன சீசனில் நெருப்புப் பற்றி அவனது ஐயாவும், அண்ணாவும் இறந்து விட்டதாகவும் கூறுகிறான். அம்மாவும், சின்ன தங்கையும் இருக்கின்றார்கள். சீசனில்லாத போது அம்மா வீட்டு வேலை செய்வதாகவும், தான் பிற எடுபிடி வேலைகளைச் செய்வதாகவும் அச்சிறுவன் பொறுப்புணர்வோடு கூறுகின்றான். பள்ளிக்குச் சென்று படித்தால் ஒரு நேரம்தான் உணவு கிடைக்கும். மிச்ச நேரம் பசிக்குமே அதனாலே தான் சின்ன வயசிலேயே தன்னை வேலைக்குச்

சேர்த்துவிட்டதாகச் சிறுவன் கூறுகிறான். வண்டியைத் தூய்மை செய்ததற்காகக் காசைக் கொடுக்கும் போது சிறுவன் இடது கையை நீட்டுகிறான். பள்ளிக்குச் சென்று படித்திருந்தால் தெரிந்திருக்கும் என பால் கூறுகிறார். அந்தச் சிறுவனின் கண்களில் கண்ணீர் துளிர்க்கின்றது 'வலது கை, சட்டைக்கு மட்டுமே இருந்தது. சிதம்பரத்துக்கு இல்லை. நாத்தழுதழுக்க, வார்த்தைகள் மெல்ல வழுக்கின சொன்னேனே சார் தீ விபத்துன்னு ...'

சிறுவர் தொழிலாளர்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது. அவர்களின் வாழ்க்கைப் பாதையையே மாற்றிவிடுகின்றது. மத்தாப்புக் கொளுத்தும் வயதில் அவர்கள் வேலை பார்த்து குடும்பத்தைக் காக்கும் கடமையில் இருக்கின்றனர் என்ற செய்தி மிகவும் வேதனைக்குரியது. பள்ளிக்குச் செல்ல வேண்டிய சிறுமி எடுபிடி வேலை செய்ய முன்பின் தெரியாத வீட்டிற்கு வேலைக்குச் செல்ல ஏற்பாடாகிறது. கண்களில் கண்ணீரோடு பலமுறை அம்மாவிடம் கூறியும் பலனளிக்கவில்லை.

"குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்போம்" என்கிற வாசகம் அடங்கிய அட்டையைப் பிடித்துக் கொண்டு போன வருடம் ஊர்வலம் போன நினைவு வருகின்றது செல்லம்மாவுக்கு. தந்தை உயிரோடு இருந்தால் நமக்கு இந்த நிலை வந்திருக்காது என நினைத்து அச்சிறுமி வருந்துகின்றாள். அவளது தந்தை குடிப்பழக்கத்திற்கு ஆளானவர். ஒருமுறை நடந்த குடித்தகராறில் இறந்துவிடுகிறார். உடல் நலம் குன்றிப் போன தாய் பத்துப்பாத்திரம் தேய்த்துப் பிள்ளைகளைக் காப்பாற்றுகின்றாள். தம்பியைப் படிக்க வைக்க வேண்டிய பொறுப்பும் இளம் வயதிலேயே செல்லம்மாவுக்குத் திணிக்கப்படுகிறது. செல்லம்மா தேர்வில் தவறியதைக் காரணம் காட்டி அவளது தாயார் வீட்டு வேலை செய்வதற்குச் சென்னைக்கு அனுப்பத் துணிகிறாள். "ஒனக்குன்னு ஒரு தட்டு, தம்ளர் எல்லாம் தருவாவ. அதுலயே நீ சாப்டுக்க. தண்ணி குடிச்சிக்க. அவிய ஏனங்கள நீ பொளங்காதட்டி அது அவியளுக்குப் புடிக்காது. நாக்காலிலல்லாம் ஒக்காராத. கீள தரையில தான் ஒக்காரணும் என்ன?"

"ஆட்டும்மா, டி.வி.யெல்லாம் பாக்க வுடுவாகளாம்மா?"

"அவியப் பாக்கும் போது நீயும் கீள ஒக்காந்து பாரு"

"லீவெல்லாம் கெடயாதாம்மா?" என்று செல்லம்மா பாவமாய் கேட்டதற்கு. பள்ளிக்கோட மாட்டி அது, லீவு வுடதுக்கு! கேக்கதப் பாரேன்" என்று அம்மா சிரிக்கப் பார்த்தாள். ஆனால் உதடுகள் சிரிக்க மறுத்தன.

பெரும்பாலான குடும்பங்களில் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் குழந்தைகள் வீட்டுவேலைக்கு அனுப்பப்படுகின்றனர். அவர்களது வீட்டுச் சூழ்நிலையை அதற்குக் காரணம் காட்டுகின்றனர்.

"அம்மா அம்மா, இனிமே நா பெயிலாகவே மாட்டேம்மா" எனச் செல்லம்மா ரயில் நகரத் தொடங்கியதும் தாயைப் பார்த்துக் கதறுகிறாள். பெரும்பாலான செல்லம்மாக்கள் இன்றும் நம்மோடு வாழ்ந்து

கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு ஏ.ஏ.ஹெச்.கே.கோரியின் ஃபெயில்காலம் என்ற கதையைச் சான்று காட்டலாம்.

சொந்த பந்தங்களைப் பிரிந்து தனியொரு ஆளாக இந்தப் பிஞ்சுகள் புதியதொரு ஊரில் தெரியாத வீட்டில வீட்டு வேலைக்கு அனுப்பப்படுகின்றார்கள். இக்குழந்தைகள் வேலை பார்க்கும் வீடுகளில் தீயவர்களின் கைகளில் சிக்கினால் அவர்களின் வாழ்க்கையே கேள்விக்குறியாவதுமுண்டு. இன்றைய நாளிதழ்களே அதற்குச் சாட்சிகளாக அமைகின்றன. இவர்கள் பலவகைகளிலும் உடல் வலியையும், மனவலியையும் சந்திக்கின்றனர். வேலைக்கு அனுப்பப்படும் குழந்தைகள் மனதளவிலும் மிகுந்த பாதிப்பிற்கு உள்ளாகின்றனர்.

சமூகம்

'மனிதர்கள்' எனும் கதையில் மக்களின் மனப்போக்கு மாற வேண்டும். ஓர் அடிப்படை சமூக மாற்றம் ஏற்பட வேண்டும். சுதந்திரம் மட்டும்தான் எங்களாலே வாங்கிக் கொடுக்க முடிந்தது. சுதந்திரம் என்பது அதுமட்டுமில்லையே. சாதிப் பாகுபாடுகள் பெருகிவிட்ட நிலை குறித்து ஒரு சுதந்திரப் போராட்ட தியாகியின் மனத்துயரம் வெளிப்படுகின்றது. ஒரு புகை வண்டிப் பெட்டியில் இடம் நிறைந்த சூழலில் கூடுதலாக ஒவ்வொருவரும் ஏறும் போதும் அங்கு நிகழும் வாக்குவாதங்களும், இறுதியில் ஒருவர் ஏறமுடியாமல் போகவே அங்கு நிகழ்ந்த திடீர் ஒருமைப்பாட்டுப் பெருமிதமும் கண்டு வேதனைப்படும் தியாகியின் விரக்தியும் கதையின் கருவாக அமைகின்றது.

சாதிப்பாகுபாடுகள் மிகுந்திருப்பதைச் சாடுதலும், மக்களிடையே ஒற்றுமையின்மை, துன்ப உணர்ச்சி, மக்கள் நல்ல செயல்களுக்கு ஒன்றுபடுவதைக் காட்டிலும் தீய செயல்களுக்கு எளிதில் ஒன்றுபடுகின்றனர் ஆகியவை இக்கதையின் மையக்கருவாக விளங்குகின்றன.

மனிதநேயம்

'மயான காண்டம்' கதையில் ஒரு விலைமகளின் சடலத்தை மயானத்தில் எரிப்பதற்கு அவ்வூர் முழுவதும் திரண்டு வந்து எதிர்க்கின்றது. அவள் உயிரோடு இருந்த பொழுது நல்லவளாகயிருந்தாள். இறந்தவுடன் ஊரைக் கெடுத்தவளாகி விட்டாளா? என்ற கிராமசேவகரின் கேள்விக் கணைகளுக்குப் பதில் கூற முடியாமல் உண்மை உணர்தலும் மனிதநேயமும் இக்கதையின் கருவாக அமைகின்றது.

வேலையில்லாத் திண்டாட்டம்

இன்றைய பொருளாதாரச் சூழ்நிலையில் வேலைக்குச் சென்று பணம் ஈட்டுபவர்களே விலைவாசி ஏற்றத்தைச் சமாளிக்க முடியாமல் பரிதவிக்கின்றனர். இந்தச் சூழ்நிலையில் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும் இன்றைய இளைஞர்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது.

இனி எனக்கு மரணமில்லை எனும் கதையில் வேலையில்லாமல் இருக்கும் ஒரு இளைஞனின் மனப்போக்கு விரிகின்றது.

"வீட்டுச் செலவுக்கென்று அம்மா கையில் இதுவரை ஒண்ணும் கொடுக்க முடிந்ததில்லை. தண்டச்சோறு என்ற பெயரைப் பெற்றதால் பெற்றவர்களையும், உறவினர்களையும் தலைநிமிர்ந்து பார்க்கக் கூச்சம். ஆண்டவனே, இந்த வாழ்க்கையில் நான் முற்றிலுமாய்த் தோற்றுவிடப் போகிறேன் என்று நிச்சயமாய்த் தெரிந்துவிட்டது'' என்கிறான். இளைஞனுக்குத் தற்கொலை எண்ணம் தலைதூக்குகின்றது. பைத்தியம் தனக்குப் பிடிக்கப்போகிறது என எண்ணி வருந்துவதும் கதையின் பின் பகுதியில் ஊக்கம் பெற்று வாழ எண்ணுவதும் புலப்படுத்தப்படுகிறது.

'திண்டாட்டம் ஒரு தொடர்கதை' எனும் கதையில் நாகராஜன் பகுதி நேர ஊழியராக வேலை பார்க்கின்றார். ஏழு வருடங்களாக வேலை கிடைக்காமல் ஒரு மாதமாகத்தான் வேலை செய்கின்றார். நாகராஜனைப் போன்றே வறிய குடும்பத்துப் பெண்ணான சரோ அந்தப் பதவிக்கு நிரந்தரப் பணியாளராக நியமனம் பெறுகின்றார். தம்பி தங்கைகளைக் கவனிக்கும் பொறுப்பு இருவருக்குமே இருக்கின்றது. நாகராஜன், தனது பணிகளைச் சொல்லிக் கொடுக்குமாறு மேலாளரால் பணிக்கப்படுகிறார். தான் வேலைக்குச் சேர்ந்ததில் மகிழ்ச்சி இருப்பினும் தன்னைப் போல துன்பப்படும் ஒருவருக்கு வேலை இல்லாமல் போகின்றதே என சரோ வருந்துகின்றாள். இப்படிப்பட்ட சம்பவங்கள் இன்றைய சூழலில் மிகுதியும் நடைபெறுகின்றன என்பதைப் படைப்பாளர் வருத்தத்தோடு எடுத்துரைக்கின்றார்.

"இவளுடைய மேடையில் நடந்து முடிந்த சோக நாடகங்கள் வேறொரு மேடையில் இன்னும் ஆக்ரோஷமாய் நடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்னும் எத்தனை மேடைகளிலோ.."

வேலை கிடைத்தாலும் சுயமரியாதை இல்லாமல் நடத்துகின்றனர். பெரும்பாலான பாக்டரிகளில் வேலையில்லாவிடினும் வெறுமனே உட்கார்ந்திருக்க வேண்டும். புத்தகம் படிக்கக்கூடாது. வெளியே செல்கையில் உடைமைகளைச் சோதனை செய்வதைத் தன்மானமற்ற செயலாகக் கருதுகிறார் படைப்பாளர்.

நிறைவுரை

ஏ.ஏ.ஹெச்.கே.கோரியின் படைப்புகளிலிருந்து வறுமை, குழந்தைத் தொழிலாளர் நிலை, சமூகம், மனிதநேயம், வேலையின்மை, பிரச்சனைகள் தொடர்பான கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பின்தங்கிய நிலையிலுள்ள மக்களின் வாழ்வியல் நிலைகளைக் காட்சிகளாகக் கண்முன் விரியச் செய்துள்ளார்.

அகநானூற்றில் கொன்றை மலர்

க. வளர்மதி
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சி

சங்க இலக்கியத்தில் பேசப்படும் மரங்களில் கொன்றையும் ஒன்றாகும். கொன்றையின் பூக்கள் சரம்சரமாக ஒள்ளிய பொன்னிறத்தில் மாலைகள் தொங்குவது போன்று மிக அழகாகப் பூத்துக் குலுங்கும். கொன்றை மரத்திற்குக் சிறப்பாகக் கருதப்படுவது கொன்றையின் பொன் போன்ற மலர்களே ஆகும். இருத்தலும் இருத்தல் நிமித்தமும் உடைய முல்லை நிலத்தாவரமாகிய இக்கொன்றையின் பூக்கள் கார்காலத்தில் மலரும் இயல்புடையதாகும். வினைவயிற் சென்ற தலைவன் மீண்டு வரும் காலத்தைத் தலைவிக்கு உணர்த்தும் பொருட்டு கொன்றையின் மலர் மலர்ந்து காணப்படும். முல்லை நிலத்தில் வாழும் ஆயர்கள் கொன்றையின் மலர்களை மாலையாகத் தொடுத்து அணிவதோடு, கொன்றை மரத்தின் உட்டுளைகளை உடைய காய்களைக் கொண்டு குழலிசைக்கும் பழக்கமும் கொண்டிருந்தனர் என்பதைச் சங்கப் பாடல்கள் மூலம் அறிய முடிகிறது.

பூக்கும் இருவித்திலைத் தாவரமாகிய கொன்றை மரம் **பைகார்ப் பெல்லேட்டே** என்ற தாவரத் தொகுதியில் **சிசால்பினே** (Caesalpineal) என்ற தாவரக் குடும்பத்தில் **காசியா** (Cassia) என்ற பேரினத்தையும் **பிஸ்டுலா** (Fistula) என்ற சிற்றினத்தையும் சார்ந்த ஒரு சிறுமரம் ஆகும்.

ஆங்கிலத்தில் கொன்றையை 'Laburanam' என்று அழைப்பர் இந்த ஆங்கில சொல்லின் பொருள் பொன்மலை என்பதாகும். மேலும், இதன் பூங்கொத்தை ஆங்கிலத்தில் Golden Shower என்றும் Streaming Gold என்றும் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். உலக வழக்கில் கொன்றையை சரக்கொன்றை, கொன்றை என்ற பெயரில் அழைப்பர். சங்க இலக்கியத்தில் கடுக்கை என்ற பெயரிலும் கொன்றை மரம் இடம் பெற்றுள்ளது. **'கடுக்கை'** என்ற பெயரில் இடம் பெற்றுள்ள கொன்றை மரம் பெரும்பாலும் பாலை நிலத்தில் காணக் கூடியதாக விளங்குகிறது.

"பிற்கால இலக்கியங்களில் கொன்றை மரம் இதழி, காமம், மதலை, ஆர்க்குவதம் என்ற பெயர்களிலும் இடம் பெற்றுள்ளதாகத் தாவரவியல் அறிஞர் ஸ்ரீநிவாசன் குறிப்பிட்டுள்ளார்"

கொன்றை மரத்தின் வகைகள்

முல்லை நிலத்தில் காணப்படும் பொன் போன்ற மலர்களையுடைய கொன்றை மரத்தினைப் பல வகைகளாகப் பிரித்துக் காட்டியுள்ளனர்.

"தாவரவியல் அறிஞர்கள் கோவை இளஞ்சேரன் கொன்றை மரத்தினைச் சரக்கொன்றை, புலிநகக்கொன்றை, சிறு கொன்றை, மயிற்கொன்றை, மந்தாரக் கொன்றை, காக்கொன்றை, எருமைகொன்றை, செங்கொன்றை, நரிக்கொன்றை, கிளக்கொன்றை எனப் பலவகைகளாகத் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்".

"இதே போன்று சண்முகசுந்தரம் தம் நூலில் சரப்பூக்கொன்றை, செம்பூங்கொன்றை, ஆவிரைக் கொன்றை சயாமியக் கொன்றை, மலைக்கொன்றை, குண்டுப்பூக்கொன்றை எனப் பலவகையாகக் குறிப்பிட்டுள்ளார்". உலக வழக்கில் கொன்றை மரத்திற்குப் பல பெயர்கள் இடம் பெற்றாலும், சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள இக்கொன்றை மரம் சரக்கொன்றையும், புலிநகக் கொன்றையுமே என இவர்கள் குறிப்பிட்டுள்ளனர். மேலும், இக்கொன்றையைச் சிவபெருமானுக்குச் சூட்டுவதால் **திருக்கொன்றை** என்ற பெயரும் உண்டு என்பதை அறிய முடிகிறது.

கொன்றை மரத்தின் பூ

ஒவ்வொரு தாவரத்திற்கும் அவற்றின் உறுப்புகளான இலை, பூ, காய், கனி, மகரந்தம், கிளை அடிப்பகுதி என ஏதாவது ஒரு உறுப்பு சிறப்பாகக் காணப்படும். அந்த வகையில் கொன்றை மரத்திற்குச் சிறப்பாகக் கருதப்படுவது பொன்னிறத்தில் காணப்படும் கொன்றையின் பூவேயாகும். கொன்றை மரம் சிறுமரமாக இருந்தாலும் அம்மரம் பூக்கும் காலத்திலும், மரமெல்லாம் கொழுந்துகள் அரும்பியிருக்கும் காலத்திலும் பார்ப்பதற்குக் கவர்ச்சியாகத் தோன்றும். மலையாளத்தில் மகளிர் தம் புத்தாண்டு நாளாக 'விசு' என்னும் விசுக்காணி கொண்டாடுவர். அப்போது பொன் போன்ற கொன்றைப் பூவைப் பரப்பி மகிழ்வாராம். ஆண்டெல்லாம் பொன் கொழிக்க வேண்டும் என்னும் ஆர்வத்தில் இவ்வழக்கத்தைக் கொண்டுள்ளனர். இதன் மூலம் இலக்கியங்களில் மட்டும் கொன்றை மலரைப் பொன்னோடு ஒப்பிட்டுள்ளனர் என்றில்லாமல் உலக வழக்கிலும் பொன்னாகவே கொன்றை மலரைப் போற்றியுள்ளனர் என்பதையும் உணர முடிகிறது.

கார் காலத்தில் இடியுடன் கூடிய மழை பொழிந்ததால் பள்ளங்களெல்லாம் நீர் நிரம்பியது. பல்வேறு மலர்கள் பூத்துக் குலுங்கின. அம்மலர்களுக்கிடையே பொன்னால் செய்த அணிகலன்களைத் தொங்கவிட்டது போன்று கொன்றையின் பூக்கள் அழகு பெறக் காடு முழுவதும் பூத்துக் காணப்படுவதைக் கண்ட தலைவியானவள் "கார் காலம் வந்து விட்டதே தலைவன் வரவில்லையே" என வருந்துகிறாள். இதனைப் பெருங்கண்ணனார் தம்பாடலில்,

"ஆடு களப்பறையின் வரி நுணல்கறங்க

ஆய்பொன் அவிர்இழை தூக்கியன்ன
நீடு இணர்க் கொன்றை கவின்பெற"

(அக 364; 3-5) என்று குறிப்பிட்டுள்ளார்.

பொன்னிற்கு இணையாக ஒப்பிட்டுப் கூறும் கொன்றை மலர் உதிர்ந்து கீழே வீழ்ந்து கிடக்கும் போது அதன் பொன்போன்ற மஞ்சள் நிறம் மாறி பழுப்பு நிறத்தில் காணப்படும் என்பதை,

"மென் தோள் நெகிழச் சாஅய், கொன்றை
ஊழுறு மலரின் பாழ்பட முற்றிய
பசலை மேனி நோக்கி நுதல் பசந்து" (அகம். 398; 3-5)

என்ற பாடல் உணர்த்துகிறது. களவொழுக்கம் காரணமாக அலர் எழுந்ததால் சில காலம் தலைவியைக் காண தலைவன் வரவில்லை. இதனால் பொன் போன்ற அப்போது மலர்ந்த கொன்றை மலர் போன்ற தலைவியின் மேனி, உதிர்ந்த கொன்றை மலர் கீழ்விழுந்து கிடக்கும் போது பழுப்பு நிறத்தில் காணப்படுவதைப் போல் தலைவியின் மேனி பசலைப் படர்ந்து மாற்றம் பெற்றதாக இப்பாடலில் புலவர் குறிப்பிட்டுள்ளார்.

கொன்றை மலரும் சிவபெருமானும்

மிக அழகுடன் மாலை தொடுத்ததுப் போன்று பொன்னிறத்தில் பூத்துக் குலுங்கும் கொன்றை மலர் சிவபரம்பொருளுக்குரிய மலர்களில் முதலிடம் பெற்று விளங்குகிறது. சங்க இலக்கியத்தில் சிவபெருமானை வாழ்த்தும் பாடல்களிலெல்லாம் சிவன் கொன்றை மலரைக் கண்ணியாகவும், தாராகவும், மாலையாகவும் சூடியிருப்பதாகக் கூறப்படுகின்றது. சிவனைக் கொன்றைவேந்தன் என்றும் குறிப்பிடுகின்றார்.

"கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்" (அக. 1; 1-2)

"எரி எள்ளு அன்ன நிறத்தின் விரி இணர்க்
கொன்றையம் பைந்தார் அகலத்தின்" (பதிற் 1:1:2)

"கொலை உழு வைத்தோல் அசைஇ
கொன்றைத் தார் சுவல் புரள" (கலி 1:11)

ஆகிய பாடல்களில் கொன்றை மலர் சிவபெருமான் அணிந்திருக்கும் மலராகக் குறிப்பிட்டிருப்பதன் மூலம் கொன்றை மலர் சிவ வழிபாட்டிற்குரிய மலர் என்பதை அறிய முடிகிறது.

கொன்றையின் காய்கள்

"கொன்றையின் முற்றிய காய்கள் கறுப்பாக நீண்டு தொங்கும் உட்டுளையுடையதாகக் காணப்படும். அதனால் சங்க இலக்கியத்தில் கொன்றையை 'குழல் காய்க் கொன்றை' என்று குறிப்பிட்டுள்ளனர்"

கொன்றைக் காயினுள் இருக்கும் உட்டுளையைத் தாவரவியல் அறிஞர்களும் உறுதி செய்துள்ளனர். "கொன்றையின் காய்கள் 30 செ.மீ. முதல் 50 செ.மீ. நீளமான வெடியாக்கனி. விதைகளுக்கு இடையே தடுப்புக்களைக் கொண்டது. விதைகள் குறுக்கே அமைந்துள்ள விதையில் முளை சூழ் தசை உள்ளது" என்று தாவரவியல் அறிஞர் குறிப்பிட்டுள்ளார்"

உட்டுளைகளையுடைய கொன்றையின் காய்களை ஆயர்கள் இசைக்குழலாகப் பயன்படுத்தினார். இதனை,

"கொடுமடி யுடையர் கோற்சைக் கோவலர்
கொன்றையங் குழலர்" (அகம் 54: 10:11)

என்று அகநானூறு குறிப்பிடுகிறது.

பெருத்த மடியையுடைய பசுக்கூட்டங்கள் தம் மடியின் சுமையைக் குறைப்பதற்குத் தன் கன்றுகளைத் தேடிச் செல்லும். மாலைப் பொழுதில் கோலைக் கையில் ஏந்திய இடையர்கள் கொன்றையினது கனிகளால் ஆகிய அழகிய குழலினால் இசைத்துக் கொண்டு மெதுவாக ஆனிரைகளின் பின்னே நடந்து வந்தார்கள் என்பது இதன் பொருளாகும். இதன் மூலம் கொன்றையின் காய் குழலிசைக்குப் பயன்பட்டதை அறிய முடிகிறது.

கொன்றையின் தாது

"கொன்றையின் மலர்கள் மட்டுமன்றி அதன் தாதும் பொன்னிறத்தில் காணப்படும். இதனை சீநிவாசன் குறிப்பிடும் போது கொன்றை பூத்தின் மகரந்தாள் இயற்கையில் 10 இதழ்களையுடையது. 3 கீழ் மகரந்தத்தாள்கள் நீளமானவை. இரண்டு மிகவும் சிறியன. மலட்டு மகரந்தப்பையுடைய 5 தாள்கள் அருகிலிருக்கும் நீண்ட தாள்களில் இருமைகள் உச்சியில் உள்ள துளை வழியாக வெடிக்கும் இயல்பின எனக் குறிப்பிட்டுள்ளார்"

கொன்றையின் தாது பொன் தூள் போன்றது. மஞ்சள் நிறத்தையுடையது. வரகின் அரிசியால் புழுக்கி உணவிற்கு இதனை உவமையாகக் குறிப்பிட்டுள்ளனர். இதனை,

"வரகின்
.... அடுப்பேற்றி
இணர்ததை கடுக்கை ஈண்டிய தாதின்
குடவர் புழுக்கிய பொன்கவிழ் புனகம்" (அக: 398 :5, 14, 15, 16)

என்ற மாமூலனார் பாடல் விளக்குகிறது.

சங்க இலக்கியத்தில் கடுக்கை

கொன்றை மரம் சங்க இலக்கியத்தில் கடுக்கை என்ற பெயரிலும் இடம் பெற்றுள்ளது. பெரும்பாலும் கடுக்கை என்பது பாலைப் பாடல்களில் மட்டுமே இடம் பெற்றுள்ளன. பிற்காலப் பாடல்களில் கொன்றையை

'கடுக்கை' என்றே குறிப்பிடுகின்றனர். *"இணர்ததை கடுக்கை ஈண்டிய தாதில்* (அகம் 393:15) *"ஓங்கு நிலைக் கடுக்கை அல்கு நிழல் அசைஇ"* (அகம 399:10) எனவரும் பாலைப் பாடல்களில் கொன்றை கடுக்கை என்ற பெயரில் இடம் பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

முடிவுரை

- பூக்கும் இருவித்திலைத் தாவரமாகிய கொன்றை மரம் பைகாரப் பெல்லேட்டே என்ற தாவரத் தொகுப்பில் சிசால்பினே என்ற தாவரத் குடும்பத்தையும் காசியா பிஸ்டுலா என்ற தாவர இனத்தையும் சார்ந்த ஒரு சிறுமரம் ஆகும்.
- கொன்றையில் புலி நகக் கொன்றை, சரக்கொன்றை, சிறுகொன்றை, மயிற்கொன்றை, மந்தாரக் கொன்றை எனப் பலவகைகள் காணப்பட்டாலும் சங்க இலக்கியத்தில் காணப்படும் கொன்றை புலிக் கொன்றை வகையைச் சார்ந்ததாகும்.
- கொன்றை மரத்திற்குச் சிறப்பாகக் கருதப்படுவது கொன்றையின் பொன் போன்ற மலர்களே ஆகும். கொன்றையை ஆங்கிலத்தில் Saburnam என்பர் இதன் பொருள் பொன்மாலை என்பதாகும்.
- மலையாளத்தில் மகளிர் தம் புத்தாண்டு நாளாக 'விசு' என்னும் விசுக்காணி கொண்டாடுவர். அப்போது கொன்றையின் பொன் போன்ற மலரைப் பரப்பி மகிழ்வராம். இதற்குக் காரணம் ஆண்டெல்லாம் பொன் கொழிக்க வேண்டும் என்பது அவர்களின் நம்பிக்கையாகும்.
- கொன்றை மலர் கார்காலத்தில் மலரும் தன்மையுடையதாகும். இம்மலர் தலைவனின் வரவினைத் தலைவிக்கு உணர்த்தும் ஒரு குறியீட்டுப் பொருளாகச் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது.
- கொன்றை மலரைச் சிவபெருமானுக்குரிய வழிபாட்டு மலராகப் பயன்படுத்துவர். இதனால் இம்மலரைத் திருக கொன்றை என்ற பெயரிலும் அழைக்கின்றனர்.
- கொன்றையின் காய் மிக நீண்டு கருமைநிறத்தில் காணப்படும். இக்காயினை ஆயர்கள் குழலிசைக்காகப் பயன்படுத்தினார் என்பதைச் சங்கப் பாடல்வழி அறிய முடிகிறது.
- கொன்றை சங்க இலக்கியத்தில் கடுக்கை என்ற பெயரில் இடம் பெற்றுள்ளது. பெரும்பாலும் கடுக்கை என்பது பாலை நிலத்தில் இடம் பெற்றுள்ள கொன்றை மரத்திற்கே பெயராக அமைந்துள்ளது என்பதைப் பாடல்கள் வழி அறிய முடிகிறது.

கருத்தாடல் விளக்கமும் கருத்துப்பரிமாற்றமும்

மு. ஜான்சி
அண்ணாமலை பல்கலைக்கழகம்

மனிதன் தன் எண்ணங்களை வெளிப்படுத்துவதற்குப் பயன் படுத்தப்படும் கருவி மொழி ஆகும். அவ்வாறு வெளிப்படும் எண்ணங்களின் பரிமாற்றமே கருத்தெனப்படுகிறது. கருத்துக்களைப் பரிமாற்றம் செய்தல் கருத்தாடலாக அமைகிறது. கருத்துப் பரிமாற்றத்தின் மூலம் மனிதன் தன் தேவையினைப் பூர்த்தி செய்கிறான். கருத்தாடலானது பேச்சு வடிவம், எழுத்து வடிவம் என்ற இருநிலைகளைக் கொண்டது. ஒருவர் கருத்தினை மற்றொருவர் புரிந்து கொள்வதுடன் அதற்கு மறுமொழி கூறும் நிலையில் கருத்தாடல் அமைப்பு அமைகிறது. கருத்தாடல் விளக்கம் பற்றியும் கருத்துப்பரிமாற்றம் பற்றியும் இக்கட்டுரையில் காணலாம்.

கருத்தாடல் விளக்கம்

ஒரு நிகழ்வினைப் பேசுபவர், கேட்பவர், எழுதுபவர், படிப்பவர் என்று யாராக இருந்தாலும் அவர்களுக்கிடையே நிகழும் மொழிவழி கருத்துப் பரிமாற்றத்திற்குக் கருத்தாடல் என்று பெயர். இதனைக் "கருத்தாடல் என்பது மொழி மூலம் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளும் செயல் நிகழ்வினைக் குறிக்கும்" என்று செ. சண்முகம் கூறியுள்ளார்.

பேசுபவரும், கேட்பவரும் தங்களுக்குள்ள தொடர்பினால் கருத்துக்களை உருவாக்குவதன் மூலம் கருத்துக்கள் பரிமாற்றம் செய்யப்படுகின்றன. இவ்வாறு பரிமாறுவதன் மூலம் கருத்தாடலின் செயல் நிகழ்கிறது எனலாம். இதனை "கருத்தாடல் என்னும் செயல் பேச்சு, எழுத்து போன்ற மொழிசார் கூறுகளையும் முகபாவங்கள், கைகால் அசைவுகள், படம், அட்டவணை போன்ற மொழிசாராக் கூறுகளையும் பயன்படுத்தி உருவாக்கப்படுகிறது. கருத்தாடல் நடைபெறுவது சமுதாயத்தின் நிகழ்வுகளினைக் கருத்தாகப் பெறுவதோடு மட்டுமல்லாமல், பெற்ற கருத்துகளானது மீண்டும் சமுதாயத்திற்கு வெளிப்படுத்தப்படுகிறது கருத்தாடலானது மனிதர்களைப் பல வகையான செயல்களில் ஈடுபடுத்துகிறது. இதனால் மனிதர்களின் உள்ளத்து உணர்வுகளும், உணர்ச்சிகளும் வெளிப்படுத்தப்படுகின்றன". இவ்வாறு உள்ளத்து உணர்வுகள் வெளிப்படுவதால் சமுதாய உறவுகள் வளர்க்கப்படுகின்றது என்று மா. வசந்தகுமாரி கருத்தாடலைப் பற்றி கூறியுள்ளார்.

கருத்தாடல் நிகழ்வுகள் பல்வேறு முறைகளில் நடைபெற்று வந்தாலும், அவற்றில் மொழியைப் பயன்படுத்தி வருகின்ற பேச்சு, எழுத்து ஆகியவற்றின் மூலம் நடைபெறும் கருத்தாடலே சிறப்பிடம் பெறுகின்றது.

கருத்தாடலைப் பல்வேறு வகையாகவும், கூறாகவும் பிரிக்கின்றன. கருத்தாடல் நிகழ்வு சில அறிஞர்கள் கருத்தாடலுக்கென்றே ஒன்றுக்கு மேற்பட்ட கூறுகளை எடுத்துரைக்கின்றனர்.

கருத்தாடலின் வேறு பெயர்கள்

உரையாடல், உரைக்கோவை, கருத்துப்பரிமாற்றம் போன்ற பெயர்களால் கருத்தாடல் அழைக்கப்படுகின்றது.

உரையாடல்

அன்றாடவாழ்வில் நாள்தோறும் நிகழ்த்தக்கூடிய நிகழ்வே உரையாடல் ஆகும். கருத்துக்கள் பரிமாறிக்கொள்வதன் ஒருவகையே உரையாடல் ஆகும். கருத்துப் பரிமாற்றத்தில் உணர்வு, ஈடுபாடு, நம்பிக்கை போன்றவை பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. "இதனைச் சூழலுக்கும், நபர்களின் பண்பிற்கும் உணர்த்த விரும்பிய உரைச் செயல்களுக்கும் ஏற்றவாறு உரைத் தொடர்களைப் படைத்து இருவர் கருத்துக்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளும் செயலை உரையாடல் எனலாம்" என்று செ. சண்முகம் குறிப்பிடுகின்றார்.

உரைக்கோவை

மனிதன் தன் கருத்தினைப் பரிமாற்றம் செய்யும் போது அதில் கருத்தின் முக்கியக் குறிகோளைப் பெறுவது என்பது பேச்சு மற்றும் எழுத்து மூலம் பெறப்படுவதாகும். அவ்வாறான கருத்தாடல் நிகழ்வினை உரைக்கோவை என அழைக்கலாம். "ஒரு பரந்த உரைக்கருத்தை வெளியிடும் வகையிலும் ஒரு மையக் கருத்துப் பரிமாற்றக் குறிக்கோளைக் கொண்ட வகையிலும், ஒரு மைய உரைச்செயலை நிகழ்த்தும் வகையிலும், நடையிலும் சில உத்திகளைக் கொண்டு வாய்மொழி வடிவிலோ, வரிமொழி வடிவிலோ படைக்கப்படுகின்ற உரைத்தொடர்களின் தொடர்ச்சியான ஒரு அலகை உரைக்கோவை எனலாம்" என்று செ. சண்முகம் கூறியுள்ளார். இவ்வகையில் உரைக்கோவைக்குப் பேச்சு மொழி, எழுத்து மொழி ஆகிய இரண்டு வடிவங்களும் பொதுவானவையாக இருக்கின்றன என்பது நமக்கு தெளிவாகிறது.

கருத்துப் பரிமாற்றம்

கருத்தாடலின் வேறு பெயர்களில் ஒன்று தான் கருத்துப்பரிமாற்றம் என்பர். பல்வேறு செய்திகளைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய செயல் கருத்துப் பரிமாற்றம் எனப்படும். அறிவு, அனுபவம், உணர்வு, விருப்பம், வெறுப்பு ஆகியவற்றினைப் பகிர்ந்து கொள்ளும் போது இவையனைத்தும் கருத்தாக உருவெடுக்கின்றன. தினந்தோறும் நடைபெறும் உலக நிகழ்வுகள், செயல்கள், கூற்றுகள் ஆகியவற்றில் மற்றவரை ஈடுபடுத்தும் போது இவை

செய்தியாக உருவெடுக்கின்றன. கருத்துப் பரிமாற்றத்தின் ஒன்றாகச் செய்திப் பரிமாற்றம் இடம் பெறுகின்றது. கருத்துக்களின் பரிமாற்றம் நடந்தாலும் மொழியின் வழி நடைபெறும் கருத்துப் பரிமாற்றமே சிறந்ததாக விளங்குகின்றது. உரையாடல், சொற்பொழிவு, பேச்சு ஆகியன வாய்மொழிக் கருத்துப் பரிமாற்ற நிகழ்வினைக் காட்டுகின்றன எனலாம். கதை, கட்டுரை, கடிதம், அறிக்கை, விண்ணப்பம் ஆகியன வரிமொழிக் கருத்துப் பரிமாற்றத்தின் நிகழ்வினைக் காட்டுகின்றன. இதன் அடிப்படையில் கருத்துப் பரிமாற்றத்திற்கு மொழியானது சிறப்பிடம் பெறுகின்றது எனலாம்.

"கருத்துப் பரிமாற்றம் என்பது ஒருவகையான சமுதாயச் செயலாகும். செயல்களின் விளைவாக விளைபொருட்கள் உருவாகின்றன. கல்லைச் செதுக்குவதால் சிலையும், பஞ்சினை நூற்பதால் நூலும் விளைபொருளாக வருவது போன்று கருத்துப் பரிமாற்றச் செயலால் மொழிப்படைப்புகளும், உரைகோவைகளும் வெளிப்படுகின்றன. உரையின் பண்பு, உரைப் படைக்கும் விதம் போன்றவற்றைக் குறித்த ஆராய்ச்சி கருத்துப் பரிமாற்றம் சார்ந்த மொழி ஆராய்ச்சி எனப்படும்" என்று செ. சண்முகம் கூறுவதன் மூலம் கருத்துப் பரிமாற்றம் இவ்வாறு அமைந்துள்ளது என்பது காண முடிகிறது.

பேச்சுக் கருத்தாடல்

பேச்சுக் கருத்தாடல் என்பது மனித சமுதாயத்தில் தோன்றிய முதல் மொழிவழிக் கருத்தாடல் ஆகும். இருவரோ, பலரோ சேர்ந்து பேசுவதன் மூலம் கருத்துகளைப் பகிர்ந்து கொள்வது பேச்சுக் கருத்தாடல் ஆகும். பேச்சுக் கருத்தாடல் என்பது சமுதாயத்திற்குச் சமுதாயம் வேறுபடுகின்றது. அத்தகைய சமுதாய நிலைக்கு ஏற்பவும் பயன்படுத்தப்படுகின்ற துறைகள் சார்ந்தும் கருத்தாடல் நிகழ்வுகள் வேறுபடுகின்றன. மொழியின் வழி நடைபெறக்கூடிய பேச்சுக் கருத்தாடலானது உச்சரிப்பின் வழி வெளிப்படுகின்றது. அவற்றுள் ஒலிப்பு முறையின் பயன்பாடு முக்கியப் பங்கு வகிக்கிறது எனலாம். அழைத்தல், கேட்டல், வினா எழுப்புதல், பதிலளித்தல், விடையளித்தல் போன்றவை மொழி சார்ந்ததாகவும், உடல் அசைவுகள், சைகைகள் போன்றவை மொழி சாராதனவாகவும் கருத்தாடலில் முக்கிய இடம் பெறுகின்றன. அவ்வகையில் பேச்சுக்கருத்தாடல் என்பது முதலில் தோன்றி நெடுங்காலமாகப் பல்வேறு மாற்றங்களைப் பெற்று அமைகின்றது என்பது இங்கு தெளிவாகிறது.

எழுத்துக் கருத்தாடல்

பேச்சானது வரிவடிவம் பெறும்போது எழுத்தாகின்றது. இதனை எழுத்துக் கருத்தாடல் எனலாம். பேச்சுக் கருத்தாடலுக்குப் பின்

ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச் சங்கம்

54, தமிழ்ச் சங்கச் சாலை

மதுரை - 625 001

தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.

செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1

தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 May 2014 Post Regd. No. MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month

செந்தமிழ்க் கல்லூரி

மதுரைத் தமிழ்ச் சங்கம்

[தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது]
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, 6575615

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

2014-2015ம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் மு. மீனா முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி	**இரா. குருசாமி** செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர், **செயலாளர்** மதுரைத் தமிழ்ச் சங்கம் மதுரை - 625 001	*From* **SECRETARY** Madurai Tamilsangam Madurai - 625 001 TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by **V. Govindarajan**, published by **R. ALAGUMALAI M.A., M.Phil.** on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **Davam Printers, 32, West Masi Street, Madurai - 1,** and published at **54, Tamil Sangam Road, Madurai.** Editor **R. ALAGUMALAI M.A., M.Phil.**